# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜுலை - 2017
பருவம் 3 புனல் 34


தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## சங்க இலக்கியங்களில் புராணக் கதைகள்




## ‘கரு’வறையையே அறுப்போம்! சமையலறைகள் எம்மாத்திரம்?



# திரைத்துறை

## முற்றிலும் அரசுடமை ஆக்கு!

# ஜாதி இழிவை நிலைநிறுத்தும் பண்பாடு

# ‘பிடி மண்’



“இந்தித் திணிப்பை எதிர்க்க - கீழடியைப் பாதுகாக்க” என்ற முழக்கத்துடன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கமும், இந்திய மாணவர் சங்கமும் இணைந்து கடந்த 26.06.2017 ல் சென்னையில் தமிழர் உரிமை மாநாட்டை நடத்தினர். மாநாட்டின் நோக்கம் மிகவும் அவசியமானது. இந்த நோக்கத்தில் பொதுவுடைமைத் தோழர்கள் ஒரு மாநாட்டை நடத்தி இருப்பது பாராட்டுக்குரியது.

மாநாட்டு நிகழ்ச்சி நிரலில், கீழடியில் இருந்து ‘பிடிமண்’ எடுத்து வந்த செயல், கடும் விமர்சனங்களை எழுப்பின. மாநாட்டுக்கு முன்பே 24.06.17 ல் தோழர் தமிழ்ச் செல்வன் அவர்கள் தனது முகநூல் பக்கத்தில் அந்தச் செயலுக்கு ஒரு முட்டுக்கொடுத்திருந்தார். அது ‘தீக்கதிர்’ நாளேட்டின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டது.

> “வறட்டு நாத்திகம் பேசிய நாம், சனங்களின் சாமிகளை மதவாதிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டோம். இன்றும் கிராமக்கோயில் பூசாரிகள் சங்கத்தை விஸ்வஹிந்து பரிஷத்காரன் தான் லபக்கியுள்ளான்.

கம்யூனிஸ்ட்டுகள் எப்போதும் நாத்திகம் பேசியதே இல்லை. தீபாவளிக்குச் சிறப்பு மலரே வெளியிடுபவர்கள் தான் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள். தமிழ்நாட்டில் - இந்தியா வில் நாத்திகத்தை மக்கள் இயக்கமாகவே கட்டி எழுப்பி யவர் தோழர் பெரியார் மட்டுமே. சாதிஒழிப்பை அடிப் படையாகக் கொண்ட பெரியாரிய நாத்திகத்தைத்தான் கம்யூனிஸ்ட் கட்சியினர் பல ஆண்டுகளாக ‘வறட்டு நாத்திகம்’ என்று கேலி பேசி வந்தனர்.

‘வறட்டு நாத்திகம்’ என்று பல அறிவுஜீவிகளால் முத்திரை குத்தப்பட்ட பெரியாரிய நாத்திகமும் - அதற்கு எதிரான ஆர்.எஸ்.எஸ் பரிவாரங்களும் இந்தியப் பகுதியில் இயங்கத் தொடங்கியது கி.பி.1925-க்குப் பிறகுதான். ஆனால், நாட்டார் தெய்வங்களும், குல தெய்வங்களும் பார்ப்பன வசமாகி முடிந்து போன காலம் கி.மு. காலங்களில் என்று தோழர் அம்பேத்கர் பதிவு செய்துள்ளார். புத்த மத அழிவே குலதெய்வ வழிபாட்டில் தான் தொடங்குகிறது. ஏதோ வறட்டு நாத்திகம் பேசியவர்களால் தான் நாட்டார் தெய்வங்கள் பார்ப்பன தெய்வங்களாகிவிட்டன என்பது தவறு. இதோ தோழர் அம்பேத்கர் பேசுகிறார்...

> “...புத்த மதம் எப்படி பிராமணர்களாலேயே அழிக்கப்பட்டது என்பது புரியவில்லை. இதற்குப் பிரதானமான காரணம் குலதெய்வ வழிபாடுதான் என்று நான் நினைக்கிறேன். இந்தியாவில் கிராம தெய்வம், தேசிய தெய்வம் ஆகியவை தவிர, குடும்ப தெய்வங்கள் இருக்கின்றன. பிராமணர்கள் மூலம் இந்தத் தெய்வங்கள் வழிபாடு செய்யப்படுகின்றன. இந்தத் தெய்வங்களுக்குப் பூசை செய்வதற்காகச் செல்கின்ற பூசாரிகள் இராணிகளின் மூலமாக அரசாங்க விஷயங்களில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கினர்.

- இலங்கை கொழும்புவில் 1950 ஜூன் 6 ல் பௌத்தர்களின் உலகத் தோழமை மாநாட்டில் தோழர் அம்பேத்கர்.

நாட்டார் தெய்வங்களை இந்து மதம் செரித்து - கழித்து - பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. இப்போது இருப்பவை இந்து மதத்தின் கழிவுகளே. அந்தக் கழிவுகளைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடு பவர்கள், தமிழறிஞர் தொ.பரமசிவன் அவர்களின் ஆய்வு மாணவர் முனைவர் ரெ.முத்துராஜன் அவர்களின் ஆய்வுநூலான ‘அய்யனார் வழிபாடு’ என்னும் நூலிலிருந்து சில சான்றுகளைப் பார்க்கலாம்.

> “கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில், திருப்பயற்றூர்ப் பதிகத்தில், “அய்யனாரைத் தன் மகனாகச் சிவன் வைத்துக்கொண்டார்” எனப் பாடுகின்றார். சிவன், திருமால் (சைவம் வைணவம்) இணைப்புக்கும் இக்கதை பயன்பட்டிருக்கிறது. இக்காலத்தில் அய்யனாருக்கு ஹரி ஹரப் புத்திரன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. - பக்கம் 17
>
> கி.பி. 7 முதல் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களில் அய்யனார் தனித்தே அமர்ந்துள்ளார். இவருக்குப் பணிவிடை செய்வதற்கு இரண்டு பெண்கள் உள்ளனர். குடை பிடித்த பணியாளும், சாமரம் வீசுகின்ற பெண்ணும் சிற்பங்களில் இடம் பெற்றுள்ளனர். ஆனால் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்காலச் சோழர்காலச் சிற்பங்களில் அய்யனார் இரண்டு மனைவியருடன் காணப்படுகிறார். சங்க இலக்கியங்களில் அய்யனாருக்கு மனைவியர் இருந்ததற்கான குறிப்புகள் இல்லை. கி.பி. 7 ஆம்

-இதன் தொடர்ச்சி பின் அட்டை உள்பக்கம்

# திரைத்துறை

## முற்றிலும் அரசுடமை ஆக்கு!

தமிழ்நாட்டில் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, தமிழ்நாட்டு திரை உலகம் ஒட்டு மொத்தமாக முடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் 30 சதவீதம் வரை கேளிக்கை வரி விதிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஜூலை 1 முதல் திரைப்படங்களுக்கு ஜி.எஸ்.டி வரி 18 சதவீதம் விதிக்கப்பட்டது. மொத்தம் 48 சத வரி என்பது திரைப்படத் தயாரிப்பு, விநியோகம், திரையரங்கங்கள் அனைத்தையும் பாதிக்கும் என்று கூறி, தமிழ்நாடு அரசை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஜி.எஸ்.டி வரிவிதிப்புக்கு முன்புவரை எவரும் இப்படி ஒரு போராட்டத்தைத் திட்டமிடவில்லை. திரைப்படங்களுக்கு ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படுவதற்கு எதிராக கமலஹாசன் குரல்கொடுத்தார். வழக்கம்போல பிறகு அடங்கிவிட்டார். ஜி.எஸ்.டி வரி திரைத்துறையைப் பாதிக்கும் என்றால் அதை எதிர்த்துப் போராடுவது தானே நியாயம்? அதை எதிர்க்க மாட்டோம். பல ஆண்டு காலமாக நடைமுறையில் இருக்கும் உள்ளூர் கேளிக்கை வரியை நீக்குங்கள் என்று கேட்பது எந்த வகையில் நியாயம்?

இந்தக் கேளிக்கை வரி என்பது நேரடியாக பஞ்சாயத்துகளுக்கும், நகராட்சி, பேரூராட்சிகளுக்கும் கிடைக்கும் வருமானம் ஆகும். வாங்கும் வரி நேரடியாக தமிழ்நாட்டுக்குப் பயன்படு வரியாகும். ஆனால், ஜி.எஸ்.டி அப்படி அல்ல. அந்த வரி முழுக்க முழுக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் செல்கிறது. திரைத்துறையினர் போராடுவதென்றால் மத்திய அரசை எதிர்த்துப் போராடவேண்டும். “மத்திய அரசின் தமிழ் டப்பிங் அரசான தமிழ்நாட்டு அரசே ஜி.எஸ்.டி வரியிலிருந்து திரைத்துறையைக் காப்பாற்று” என்று கோரிக்கையை முன்வைத்து, தமிழ்நாட்டு அரசை எதிர்க்கலாம். தமிழ்நாட்டு மக்களுக்குச் சேரும் 30 சதம் கேளிக்கை வரியை நீக்கச் சொல்லக் கூடாது.

பார்ப்பனக் கருத்தியலின் ஆதிக்கத்தில் தான் இத்துறை இயங்குகிறது. இப்போது *Gemini Studios, Kavithalaya Productions* போன்ற பார்ப்பனக் கம்பெனிகளும் *PVR Pictures, Reliance Big Entertainment, Yash Raj Films (YRF), UTV Motion Pictures Mumbai* போன்ற இந்திய தேசிய முதலாளிகளின் கம்பெனிகளும் *The Walt Disney Company, Fox Studios, Eros International* போன்ற மல்டி நேஷனல் கம்பெனிகளும் தமிழ்த்திரையுலகில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. புதிதாக, கலைஞரின் குடும்பக் கம்பெனிகளும், நடிகர்கள் கமல், ரஜினி, சிவக்குமார் போன்றோருக்குச் சொந்தமான திரைப்படத் தயாரிப்புக் கம்பெனிகளும், விஜயா ஸ்டுடியா, ஏ.ஜி.எஸ் போன்ற ஆந்திர, கேரள கம்பெனிகளும் உள்ளன.

இந்தியாவின் பெரும்பாலான திரை அரங்கங்கள் *INOX, IMAX, BIG Cinemas, PVR, Carnivel* போன்ற இந்திய தேசியப் பெரு முதலைகளின் கட்டுப் பாட்டில் தான் உள்ளன. இந்த நிறுவனங்கள் பல பன்னாட்டு வணிக நிறுவனங்களின் கூட்டுடன் இயங்குகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் குறைந்தது 500 திரையரங்குகளுக்கு மேல் வைத்துள்ளன. பார்ப்பனக் கருத்தியலுக்கும், இந்திய தேசிய - பன்னாட்டு முதலாளிகளின் வணிகக் கொள்ளைக்கும் எதிராக எவரும் எதையும் செய்துவிட முடியாது என்ற நிலையில் தான் இந்தியத் திரை உலகம் இயங்குகிறது. பெரிய பட்ஜெட் படங்களை ஓட வைப்பதும், சிறிய பட்ஜெட் படங்களை அடையாளம் தெரியாமல் அழித்து விடுவதும் இந்தியமயம், உலகமயத்தின் போக்குகளாகும்.

இந்த இந்திய மயமாக்கல், உலகமயமாக்கலால், கமல், ரஜினி, அஜித், விஜய் போன்ற பெரு நடிகர்களின் படங்களுக்கு அதிகமான வருமானம் கிடைக்கிறது. மணிரத்னம் படங்களும், மேற்கண்ட பெரு நடிகர்களின் படங்கள் அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும் தமிழிலும், அந்தந்த மாநில மொழிகளிலும் திரையிடப்படுகின்றன. ஆனால், சுசீந்திரனின் படத்துக்கோ, ராஜூமுருகன் படத்திற்கோ, எழில், சமுத்திரக்கனி, சசிக்குமார் படத்துக்கோ அப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்காது. இவர்களைவிட இளையவர்களாகப் பலரும் இப்போது திரைத்துறையில் பல்வேறு தொழில்நுட்பங்களில் சாதித்து வருகின்றனர். இவர்கள் எவருக்கும் அகில இந்திய உலகளாவிய வணிக வாய்ப்பு கிடைத்துவிடாது.

ஏனென்றால் இவர்கள் எடுக்கும் படங்களின் மய்யக் கரு, கதைக்களம் அனைத்தும் தமிழர்களை மய்யப்படுத்தி இருக்கும். தமிழர்களை மட்டும் மய்யப்படுத்திப் படம் எடுத்தால், அப்படம் இந்திய அளவில் வணிகத்தில் வெற்றி பெறாது. ஜாதிஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புப் பற்றிப் படமெடுக்க நினைத் தால்கூட, பா.ஜ.க மற்றும் பார்ப்பன அடிமை யான இரஜினியை வைத்து எடுத்தால் அகில இந்திய வணிகம் நடக்கும். பார்த்திபனை வைத்து எடுத்தால் படம் தமிழ்நாட்டைத் தாண்டாது என்ற நிலைதான் நிலவுகிறது.

தமிழ்த்திரை உலகிலேயே பார்ப்பன இந்திய தேசிய பன்னாட்டுக் கூட்டணி ஆதிக்கச் சக்தியாக இயங்குகிறது. அந்தக் கூட்டணிக்குத் துணைபோகும் பிற்படுத்தப்பட்டோர் திரை உலகம் தனியாகவும், அந்தக் கூட்டணிக்குத் துணைபோகும் தாழ்த்தப் பட்டோர் திரை உலகம் தனியாகவும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. திரைஉலகில் உள்ள பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் இணைந்து, இந்தப் பார்ப்பன- இந்திய தேசிய- பன்னாட்டு முதலைகளை விரட்டி அடித்தால் மட்டுமே தமிழ்த்திரைத்துறை வளரும்.

ஜி.எஸ்.டி வரியோ, தமிழ்நாட்டின் 30 சதம் கேளிக்கை வரியோ திரைத்துறையை அழித்து விடாது. இந்தத் துறையில் இந்திய தேசிய முதலாளிகளுக்கும், மல்டி நேஷனல் கம்பெனி களுக்கும் கதவைத் திறந்துவிட்ட போதே தமிழ்த் திரைத்துறையின் அழிவும் தொடங்கி விட்டது.

ஒருவேளை வரிகள் தான் திரை உலகத்தை அழிக்கும் என்று கருதினாலும், முதலில் ஜி.எஸ்.டி வரிக்கு எதிராகப் போராட வேண்டும். அதை விட்டு விட்டு நம் தமிழ்நாட்டு மக்களுக்கு நேரடிப் பலன் கொடுக்கும் கேளிக்கை வரியை நீக்கச் சொல்வது தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகம் ஆகும்.

உயர்நீதிமன்றத்தின் மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டது. அதை எதிர்த்து இந்த பா.ஜ.க வின் தமிழ் டப்பிங் அரசு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. நாட்டின் உற்பத்தியில் தொடர் புடைய விவசாயத் தொழிலை அழிப்பதற்கு முனைப்பாக இயங்குகிறது. நாட்டின் உற்பத்திக்கு நாட்டின் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் பயன்படாத திரைத்துறைக்கு கேளிக்கை வரியைக் குறைக்க முயற்சி எடுத்து வருகிறது. பொதுவுடைமை பேசும் பினராய் விஜயனின் அரசுகூட திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியை ரத்து செய்துள்ளது. இது என்ன பொதுவுடைமையோ தெரியவில்லை.

“கேளிக்கை வரியைக் கொடுத்து எங்களால் திரைப்படங்களைத் தயாரிக்க முடியாது. திரை அரங்குகளை நடத்த முடியாது” என்றால், உங்களை யாரும் நடத்தச் சொல்லவில்லை. அப்படி நீங்கள் யாரும் நட்டப்படத்தேவையில்லை. போய் வேறு வேலை இருந்தால் பாருங்கள். திரைப்படத் தயாரிப்பையும், திரை அரங்கங்களையும் அரசுடைமை ஆக்கிவிடலாம்.

திரைப்படத் தயாரிப்பு, விநியோகம், திரையிடல் சார்ந்த அனைத்துத் தொழிலாளர் களையும் அரசு ஊழியர்களாக மாற்றிவிடலாம். கதாநாயகன், கதாநாயகி, வில்லன், துணைநடிகர்கள், தொழில் நுட்பக்கலைஞர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக்கி விடலாம்.

இரஜினிகாந்தோ, கமலோ, அஜித், விஜயோ, நயன்தாராவோயாராக இருந்தாலும் மாதச் சம்பளம் வாங்கி நடிக்கட்டும். எவ்வளவு திறமையான இயக்குநராக இருந்தாலும் பரவாயில்லை. மாதச் சம்பளத்திற்கு உழைக்கட்டும். அப்படி எல்லாம் முடியாது என்றால் இடத்தைக் காலி செய்யட்டும்.

புதிய புதிய இளைஞர்கள் ஏராளமாக வருவார்கள். சாராயத்தையே விற்கும் அரசாங்கம், திரைப்படம் எடுப்பதோ, தியேட்டர்களை நடத்துவதோ குற்றமாகிவிடாது. திரைக்கலையை வளர்க்கவும், திரைத்துறையில் நிலவும் பார்ப்பன இந்திய தேசிய பன்னாட்டுக் கூட்டுக்கொள்ளையை முடிவுக்குக் கொண்டுவரவும் திரைத்துறையை முற்றிலும் அரசுடைமை ஆக்க வேண்டும்.








தமிழர்களை, பார்ப்பனர்களின் 'வைப்பாட்டி மக்கள்' என்று கூறும்

# ஆவணி அவிட்டத்தைத் தடைசெய்!

பன்றிக்குப் பூணூல் போடும் போராட்டத்தை த.பெ.தி.க அறிவித்துள்ளது. பார்ப்பனக்கூட்டம் அலறுகிறது. இப்போராட்டம் இந்துக்களின் மனதைப் புண்படுத்துவதாகச் சில அறிவாளிகள் எழுதுகின்றனர். திடீர் இந்துக் கம்பெனிகள் இலசவ விளம்பரங்களைச் செய்து வருகின்றன. பன்றிக்குப் பூணூல் போடுவதால், இந்துக்களின் மனது புண்படும் என்று சொல்வதற்கு முன், பார்ப்பனர் பூணூல் போடுவது என் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பார்ப்பன இனத்தில், பார்ப்பனச் சிறுவர்களுக்கு அவர்களது 8 வது வயதில் 'உபநயனம்' என்ற சடங்கை நடத்துகிறார்கள். அதுவரை வெறும் முதுகோடு இருந்த சிறுவன், அன்றைய நாளில் பூணூல் அணிந்து பிராமணனாக 'இரண்டாவது பிறவி' எடுக்கிறான். அப்படி 'பிராமணனாக' மாறியதன் அடையாளமாகத் தான் 'பூணூல்' அணிவிக்கப்படுகிறது. ஆவணி மாத அவிட்ட நட்சத்திரத்தில் வரும் இந்த நாளுக்கு 'ஆவணி அவிட்டம்' எனப்படும்.

இப்படி வெளிப்படையாகத் தன்னை 'பிராமணன்' என்று அறிவித்துக்கொள்வதற்கு ஒரு விழாவே நடத்துவது தவறு என எந்தப் பார்ப்பானும் இதுவரை சொல்லவில்லை. எந்தத் தமிழனும் சொல்வதில்லை. இப்படிப் பூணூல் அணிந்து தங்களை அவர்கள் 'பிராமணர்கள்' என்று அடையாளப்படுத்திக் கொண்டால், பார்ப்பனர் அல்லாத நாம் அனைவரும் 'சூத்திரர்கள்'. என்று ஏற்றுக்கொள்வதாகப் பொருள்.

'சூத்திரர்' என்றால் **'பிராமணர்களின் வைப்பாட்டி மக்கள்'** என்று பொருள். ஆம். அப்படித்தான் இந்து மனுசாஸ்திரம் கூறுகிறது. (அத்தியாயம் 8; ஸ்லோகம் 415) இந்திய அரசியல் சட்டத்தில் 372 வது பிரிவு இதற்குப் பாதுகாப்பாக உள்ளது.

அதனால்தான் தோழர் பெரியார் "ஒரு தெருவில் ஒரு வீட்டில் மட்டும் இது பத்தினியின் வீடு என எழுதினால் மற்ற வீடுகள் என்ன வகையான வீடுகள்?" எனக் கேட்டார். அதாவது, ஒருவர் தன்னை 'பிராமணர்' என்று அறிவித்துக் கொண்டால் மற்றவர்கள் 'சூத்திரர்கள்' என்று தானே பொருள் எனக் கேட்டார்.

ஒரு பார்ப்பனரைப் பூணூல் அணிய அனுமதித்தாலே, நம்மைச் 'சூத்திரன்' என்று, 'பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்' என்று நம்மை நாமே ஒத்துக்கொள்வதாகத்தான் பொருள். இது இந்துக்களின் மனதைப் புண்படுத்தாதா?

இந்துக்களுக்காகப் போராடுவதாகச் சொல்லிக்கொள்ளும் அமைப்புகள், பன்றிக்குப் பூணூல் போடும் போராட்டத் தடை செய்! என கூறுவதற்கு முன்பு, இந்து மதத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் 'ஆவணி அவிட்டத்தைத் தடைசெய்' என்று தான் கோரிக்கை வைத்திருக்க வேண்டும்.

இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் போன்ற இந்து இயக்கங்களில் தீவிரமாகப் பணியாற்றும் அனைத்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத் தொண்டர்களையும்கூட 'பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்" என்று தான் சட்டமும், இந்து சாஸ்திரங்களும் கூறியுள்ளன. முதலில் அதை எதிர்த்து இந்து இயக்கங்கள் எதையாவது செய்துவிட்டு, அதன் பிறகுதான், பன்றிக்குப் பூணூல் போடுவது பற்றிப் பேச வேண்டும். அதுதான் நேர்மை.

**பன்றிக்குப் பூணூல் போடுவதும் 'உபநயனம்' தானே?**

"ஒரு பிராமணன் வயிற்றில் சூத்திரன் கொடுத்த உணவுடன் இறப்பின், அவன் அடுத்த பிறவியில் நாட்டுப்புறப் பன்றியாகப் பிறப்பான்."

***( வசிஷ்ட தர்மம்: இயல் 6, பா. 27-29)***

'சூத்திரர்களின் நிலை பற்றிய பிராமணியக் கொள்கை' என்ற தலைப்பில் தோழர் அம்பேத்கர் எழுதியது. (அம்பேத்கர் நூல் தொகுப்பு 13 - இயல் 3)

ஆக, உங்கள் இந்து தர்மங்களின் படியேகூட, நாட்டுப்புறப் பன்றிகள் எல்லாம், பார்ப்பனர்களின் முன்னோர்கள்தானே? பித்ருக்கள் தானே? நியாயமாக, நீங்கள் உண்மையிலேயே இந்து மத தர்மங்களைப் பின்பற்றுவதாக இருந்தால், ஒவ்வொரு ஆண்டும், ஆவணி அவிட்டத்தன்று, நீங்களே உங்கள் முன்னோர்களான பன்றிகளுக்குப் பூணூல் அணிவித்திருக்க வேண்டும். உங்கள் நன்றி மறந்த செயலை தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நினைவூட்டுகிறார்கள். அதற்கு ஏன் கோபம்?

**த.பெ.தி.க தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்:**

நல்ல சுத்தமான, கலப்பு இல்லாத நாட்டுப் பன்றியாகப் பார்த்து பூணூல் போடுங்கப்பா.. இல்லேனா... ஆச்சாரம் கெட்டுப்போயிரும்...



புலவர் கோ.இமயவரம்பன்

# சங்க இலக்கியங்களில் புராணக் கதைகள்

சங்க இலக்கியங்களில் ஆரியர் தம் வருணாசிரமக் கருத்துக்கள், வேத வேள்விகள் , மூடப் பழக்க வழக்கங்கள் முதலியன எப்படிக் குடி புகுந்து விட்டனவோ அதுபோலவே வடமொழி இதிகாசங்கள் புராணங்கள் ஆகிய வற்றில் காணப்படும் செய்திகள் கருத்துக்கள் ஆகியவைகளும் சங்க இலக்கியங்களில் காணக்கிடக் கின்றன.

**இராமாயணக்கதைச் செய்திகள்**

இராமன் சீதையை இலங்கையினின்று மீட்டுவரும் பொருட்டு வானர சேனைகளுடன் தனுஷ்கோடியில் ஓர் பெரிய ஆலமரத்தின்கீழ் அமர்ந்து அலோசனை நடத்தினான். அப்போது அம்மரக்கிளையில் தங்கி இருந்த பறவை இனங்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தன. இதனால் இராமனுடைய மந்திராலோசனைக்குத் தடை ஏற்பட்டுவிட்டது.

உடனே இராமன் தனது கையினைக் குவித்து அப்பறவைகளின் ஒலியினை அடக்கினான். இப்படி அகநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகின்றது.

வெவ்வெல் கவுரியர் தொன்முதுகோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கு முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல வீழ் ஆலம் போல - *பாடல் 70 :13 -16*

புறநானூற்றுப் பாடல் ஒன்று “இராமன் காட்டில் சீதையுடன் வசிக்கும்போது இலங்கை வேந்தனான இராவணன், சீதையினை இராமன் அறியாவண்ணம் தூக்கிச் சென்றான் என்றும், அப்போது சீதையானவள் தன்னுடைய ஆபரணங் களை ஒவ்வொன்றாகக் கழற்றி வழிநெடுகப் போட்டுக்கொண்டே போனாள் என்றும், இந்தக்காட்சியினைக் கண்ட குரங்குக் கூட்டங்கள் அந்த ஒளிமிக்க ஆபரணங்களைக் கண்டு மிக்க வியப்படைந்தன” என்றும் கூறுகின்றது.

கடதெறல் ராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலம்சேர் மதர் அணிகண்ட குரங்கின்
செம்முகப் பொருங்கினை - *பாடல் 378 : 18 -21*

**இராவணன் கைலை மலையைப் பெயர்த்த செய்தி**

கலித்தொகை பாடல் ஒன்றில் “சிவபெருமான் உமாதேவியுடன் கைலைமலையில் வீற்றிருக்கும் போது, பத்துத் தலைகளை உடைய அரக்கனான இராவணன், தனது வலிமைமிக்க கைகளால் அம்மலையினை எடுக்கத் தலைப்பட்டான் என்றும் அது கண்டு சிவபெருமான் தனது கட்டை விரல் நுனியினால் அம்மலையினை அழுத்த - அதனுள் அகப்பட்டு இராவணன் வருந்தினான்” என்றும் கூறப்படும் புராணக்கதை குறிக்கப்பட்டுள்ளது.

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக
தொடிப்பொலி தடக்கையின் கீழபுகுத்து அம்மலை
எடக்கல் செல்லாது உழப்பவன் போல - *பாடல் 38 :1 - 5*

**மகாபாரதக் கதைச்செய்திகள்**

*மேற்கண்ட இராமயணக் கதைகளின் செய்திகள் போலவே, மற்றொரு இதிகாசமான பாரதக் கதைச் செய்திகளும் பல காணப்படுகின்றன.*

**அரக்குமாளிகைக்குத் தீயிட்டது**

*துரியோதனன் அரக்கினால் பொய்யாக ஓர் மாளிகை அமைத்து அம்மாளிகைக்குப் பாண்டவர் களை அழைத்து இருக்கச்செய்தான் என்றும், அப்படி அவர்கள் தங்கி இரவில் உறங்கிக் கொண்டு இருக்கும் நேரத்தில், அவன் அந்த அரக்கு மாளிகைக்குத் தீ இட்டான் என்றும் கூறப்படும் புராணச்செய்தியும் கலித்தொகை நூலில் காணப் படுகிறது.*

வயக்குறு மண்டலம் வடமொழிப் பெயர் பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
அய்வர் என்று உலகேத்தும் அரசர்கள் அகத்தராக
கைபுனை அரக்கில்லைக் கதழ்எரி சூழ்ந்தாங்கு
*- பாடல் 25 :1-4*

**தீப்பற்றிய அரக்குமாளிகையிலிருந்து பீமன் அய்வரையும் காப்பாற்றியது**

*அரக்குமாளிகை தீப்பற்றி எரியும் காலத்தில் தருமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதை ஆகிய அய்வரும் நன்கு உறங்கிக் கொண்டு இருந்தார்கள் என்றும், அதுசமயம் விழித்துக்கொண்ட பீமன், அந்த அய்வரையும் தோளின் மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு சுரங்கத்தின் வழியாக வெளியேறி, காப்பாற்றினான் என்றும் கூறப்படும் செய்தி மேற்படி பாடலிலேயே உள்ளது.*

ஒள்ளுரு வரக்கில்லை வளிமகன் உடைத்துத்தன்
னுள்ளத்துன் கிளைகளோடுயப்போகு வான்போல
– என்று வந்துள்ளது.

*மேலும் பீமன் துர்ச்சாதனன் நெஞ்சத்தைப் பிளந்து தன் சபதம் முடித்த செயல், கலித்தொகையில் பாடல் 101 : வரிகள் 18 - 20 லும், போர்க்களத்தில் துரியோதனன் தொடையினை பீமன் அறுக்கும் செய்தி, பாடல் 52 : வரிகள் 2 - 3 லும், அசுவத்தாமன் தன் தந்தையாகிய துரோணச்சாரியனைக் கொன்ற வனைத் தன் தோள்வலிமையினால் கொன்ற செய்தி, பாடல்101 : வரிகள் 30 - 32 உள்ளன.*

**பரசுராமன் சூளரை**

*பரசுராமன் “இம்மண்ணுலகிலேயே க்ஷத்திரிய அரசத் தரப்பினர் ஒருவர்கூட இல்லாமல் பூண்டோடு ஒழிப்பேன்” என்று சபதம் செய்து, மிக்க முயற்சியோடு ஓர் பெரிய வேள்வியைச் செய்து முடித்தான் என்ற செய்தி*

மன்மருற் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன் றரிதினின் முடித்த வேள்வி
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல ”-
*அகப்பாடல் 220 : 5-8*

**கிருஷ்ணன் ஆயர் பெண்களின் ஆடைகளை ஒளித்தல்**

*ஆயர் பெண்கள் யமுனை ஆற்றின் கரையில் ஆடைகளையெல்லாம் வைத்துவிட்டு, நதியில் நீராடிக்கொண்டு இருந்தனர். அவர்கள் அறியாவண்ணம் கண்ணன் அவர்களது உடைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு அருகில் இருந்த குருந்த மரத்தில் ஏறிக்கொண்டான்.*

*அது கண்ட ஆயர்மகளிர் தங்கள் கைகளால், தங்கள் அங்கங்களை மறைத்துக்கொண்டு, உடை யினைத் தரும்படி கண்ணனை வேண்டிக் கொண்டனர். கண்ணணோ எல்லோரும் தங்கள் இரு கைகளையும் நீட்டி வெளியில் வந்து கேட்டால் தருவதாகக் கூறிக்கொண்டு இருக்கும்போது, கண்ணனுக்கு மூத்த பலராமன் அவ்விடம் வந்தான். அது கண்ட கண்ணன் குருந்த மரத்தின் கிளையினை மிதித்து அதனைத் தாழும்படி செய்து அதில் அப்பெண்களை மறைத்துக் கொள்ளும்படி செய்தான். இச்செய்தியும் அகநானூற்றில் காணப் படுகின்றது.*

வடா அது வண்புனல் தொழுதை
வார்மணல் அகன்றுறை அண்டர்மகளிர்
மரஞ்செல மிதித்த மாஅல் போல ”
*அகநானூறு பாடல் 59 : வரிகள் 3 - 6*

*இவைமட்டும் அல்லாமல் சங்க இலக்கியங் களில் அருந்ததி, அகலிகை, பிரகலாதன் பற்றிய செய்திகள், சிவன் விஷ்ணு, பிரம்மா, முருகன், பலராமன் ஆகியவர்கள் பற்றிய புராணக்கதைகள் ஆகியவைகளும் ஆங்காங்கு காணப்படுகின்றன. இவற்றினைச் ‘சங்க இலக்கியங்களில் கடவுள்கள்’ என்ற தலைப்பின் கீழ் அடுத்துக் காண்போம்.*

*எனவே இதுகாறும் மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளில் இருந்து சங்க காலம் எனப்படும் இன்றைக்கு சற்றேறக்குறைய 1800 அண்டுகளுக்கு முன்னமேயே தமிழகத்தில் வடமொழிப் புராணக் கதைகள் நன்கு பரப்பப்பட்டு இருந்திருக்கின்றன எனத் தெரியவருகிறது. பண்டை இலக்கியங்களில் இச்செய்திகளை எடுத்தாளும் அளவுக்கு இவைகள் செல்வாக்குப் பெற்று இருக்கின்றன என்பதனைப் பார்க்கும் போது ஆரிய ஆதிக்கம் எந்த அளவுக்கு தமிழ்நாட்டில் வேரூன்றி இருந்தது என்பது விளங்கும்!*

*இந்தக் காலத்தில் எப்படி நமது மந்திரிகள், சட்டசபை உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், ஆங்கிலம் படித்த மேதாவிகள், பட்டதாரிகள் எனக் கூறப்படுபவர்கள் புலவர்கள் ஆகியவர்கள் மூட நம்பிக்கையும் புராண நம்பிக்கையும் உடையவர் களாக இருந்து வருகின்றனரோ - அது போலவே சங்ககாலத்துப் புலவர்கள், அரசர்கள், பொதுமக்கள் ஆகியவர்களும் மூடநம்பிக்கை உள்ளவர்களாகவே இருந்திருக்கின்றனர். இப்படி, பன்னெடு நாட்களுக்கு முன்னமேயே நம் நாட்டில் குடிபுகுந்து வேரூன்றிய ஆரிய ஆதிக்கம், இன்று செழித்து வளர்ந்து, பூத்துக் காய்த்து, கனிந்து காணப்படுகின்றது.*

**சங்க இலக்கியங்களில் புராணக் கடவுள்கள்**

*பண்டைய தமிழர்கள் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உயரிய நெறி நின்று ஒழுகி வந்தார்கள் என்றும், அவர்கள் பல்வேறு தெய்வங் களைக் கொண்டவர்கள் அல்லர் என்றும் தாங்கள் தாம் தமிழ்பற்றுக்கும், தமிழ் நாகரீகத்துக்கும் கர்த்தாக்கள் என்று எண்ணிக்கொண்டு சிலர் எழுதியும் கூறியும் வருகின்றனர்.*

*தமிழன் என்றைக்குமே 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உயரிய கொள்கையினைக் கொண்டு வாழ்ந்தான் என்று பெருமை பாராட்டிக் கொள்ள நமக்கு எந்தவித ஆதாரமும் இல்லை.*

*"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது, சங்ககாலத்திற்கு மிகப் பிந்திய காலத்தில் வாழ்ந்த திருமூலரின் திருமந்திரத்தின் ஒரு பாட்டின் ஒரு அடியில் வரக்கூடியதை மட்டும் எடுத்துக்கொண்டு பெருமிதப்பட்டால் போதுமா?*

**இலக்கிய ஆதாரமென்ன?**

*இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் இலக்கிய ஆதாரங்களை வைத்துக் கொண்டு பார்த்தால் காலத்தால் முற்பட்ட தொல்காப்பி யத்தில் ஆகட்டும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களில் ஆகட்டும் தமிழன் ஏகதெய்வ வணக்கத்துடன் வாழ்ந்தான் என்பதற்கு ஆதாரமே இல்லை.*

*அவன் ஆரியர்களின் இதிகாசங்களிலும், புராணங்களிலும் காணப்படும் சிவன், விஷ்ணு, பிரம்மா, முருகன், கொற்றவை (துர்க்கை), இந்திரன், பலராமன் போன்ற தெங்வங்களை வணங்கியதோடு சிறுதெய்வங்களையும், துஷ்ட தெய்வங்களையும் வணங்கி வந்திருக்கின்றான். மேற்கூறிய செய்திகள் பற்றி இக்கட்டுரையில் ஆய்வோம்.*

**சிவன்**

*சிவன் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன்; காளை வாகனன்; கங்கையைச் சடையில் கொண்டவன்; நெற்றியில் பிறைச் சந்திரனைத் தரித்தவன்; உமையொருபாகன்; நீலகண்டன்; திரிபுரம் எரித்தவன்; முக்கண்ணன்; மழுப்படையை உடையவன்; கொடுகொட்டி, பாண்டுரங்கம், கபாலம் முதலிய கூத்துக்களை ஆடுபவன்" என்பவைகள் சங்க இலக்கியங்களில் குறிக்கப் பட்டுள்ளமையினை இங்கு காண்போம்.*

**திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன்**

அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த...
*-கலி 150 : 20*

ஆதிரை முதல்வனின் கிளந்த நாதர் பன்னொரு வரும்
*- பரிபாடல் 8 : 6-7*

**காளை வாகனன்**

காளை மாட்டை வாகனமாகக் கொண்டு ஊர்ந்து வருவபவன்.

ஊர்தி வால் வெள்ளேறே *- புறநானூறு 1 : 3*

புங்கவம் ஊர்வோனும் (புங்கவம்-காளை)
*- பரிபாடல் 8 , 2*

உருவ ஏற்று ஊர்தியான் *- கலி 150 : 13*

**கங்கையினைச் சடையில் வைத்திருப்பவன்**

விரி சடைப் பொறை ஊழ்த்து
விழுநிகர் மலர் ஏய்ப்பத்
தனிவுற தாங்கிய தனி
நிலைச் சலதாரி
மணி மிடற்று அண்ணற்கு
*- பரிபாடல் 9 : 5 - 7*

தேறுநீர் சடைக் கரத்து திரிபுரம் தீமடுத்து
*- கலி : 1-2*

இமைய வில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
*- கலி: 38 : 1*

பிறங்குநீர் சடைக் கரந்தான்
*- கலி 150 : 9*



**நெற்றியில் பிறைச்சந்திரனைச் சூடியவன்**

கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல
*- கலி 103 : 15*

" கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
ஆடையான் மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணான் றிரி தருங்கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றையவன் *- கலி : 142 : 24-28*

புதுத்திங்கள் கண்ணியான் பொற்பூண் ஞான் றன்னநின்
*- கலித்தொகை 150 : 17*

தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்
பிறைநுதல் வண்ணம் ஆகின்று அப்பிறை
*-புறநானூறு 1 : 8 9*

கறை மிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
*- புறநானூறு 55 : 4 5*

**உமையொருபாகன்**

உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டவன் :-
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
*- திருமுருகாற்றுப்படை 153*

பெண்ணுரு வொருதிறன் ஆகின்றது ; அவ்வுருத்
தன்னுள் அடக்கின் கரக்கினும் கரக்கும்
*- புறநானூறு 1 : 7-8*

**நீலகண்டன்**

*தேவர்களும் - அசுரர்களும் மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பை நாணாகவும் கொண்டு அமிர்தம் வேண்டிக் கடல்கடைந்த போது, வாசுகி என்ற அந்தப் பாம்பானது வலி பொறுக்க மாட்டாது நஞ்சைத் திரண்டுவரும் அமிர்தத்தில் கக்கிவிட்டது.*

*அதுகண்ட தேவர்கள் கலங்கினர். சிவன் அந்த விஷத்தை எடுத்து உண்டான். உமாதேவி அதுகண்டு பயந்து ஓடிப்போய், அவனது கண்டத்தினைப் பிடித்தாள். அதனால் அந்த நஞ்சானது கண்டத் திலேயே நின்றுவிட்டது. இதன் காரணமாக சிவன் நீலகண்டன் என்று பெயர் பெற்றான் என்பது புராணக்கதை.*

நீலமணிமிடற்று ஒருவன் போல *- புறநானூறு : 91 -6*
மறுமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த
*- பரி பாடல் 8 : 127*
மணி மிடற்று அணி போல *- கலித்தொகை : 105 ,13*
மணிமிடற்று மாண்மலர்க் கொன்றையவன்
*- கலித்தொகை : 142 : 27-28*
கறைமிட றணியலு மணிந் தன்றக் கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
*- புறநானூறு : 1 : 5 - 6*

**திரிபுரம் எரித்தவன்**

*பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆகிய மதிற் சுவரைக் கொண்ட மூன்று கோட்டை களையுடைய அவுணர்கள் தேவர்களை துன்புறுத் தினர். தேவர்கள் எல்லாம் பிரம்மாவினிடம் சென்று முறையிட, பிரம்மா தேவர்களை கூட்டிக்கொண்டு சிவனிடம் சென்று முறையிட்டான்.*

*அப்போது சிவன் பூமியை இரதமாகவும், தேவங்களை குதிரைகளாகவும், பிரம்மாவைத் தேரோட்டியாகவும், விஷ்ணுவை அம்பாகவும், மேரு மலையை வில்லாகவும், வாசுகி என்ற பாம்பை நாணாகவும் கொண்டு ஒரே அம்பினால் மூன்று கோட்டைகளையும் தகர்த்து, அவுணர்களையும் அழித்தானென்பது புராணக்கதை. இதுவும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.*

ஆதியந்தணனறிந்து பரிகொளுவ
வேதமாபூண் வையத்தேரூர்ந்து
நாகம் நாணா மலை வில்லாக
மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின்முளிய
மாதிரம் அழலவெய் தமரர் வேள்வி
*- பரிபாடல் 5 : 22-26*

ஓங்குமலைப் பெருவிற்பாம்பு ஞாண் கொளீ இ
யொருகணை கொண்டு மூவெயிலுடற்றிப்
பெருவிறலமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல
*- புறநானூறு 55 : 1-4*

**மூன்று கண்களை உடையவன்**

முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே
*- புறநானூறு 6 : 18*
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
*- திருமுருகாற்றுப்படை 153*
மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதன்
முக்கண்ணா னுரவேபோன்
*- கலித்தொகை 104 : 11-12*

*இது மட்டுமல்லாமல் கலித்தொகை என்னும் சங்க இலக்கிய நூலுக்குக் கடவுள் வாழ்த்தாகக் கூறப்பட்ட பாட்டில் சிவன் ஆடியதாகக் கூறப்படும் கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம் ஆகிய கூத்துக்கள் கூறப்பட்டு உள்ளன.*

**கொடு கொட்டி**

*இது சிவன் உலகை எல்லாம் அழித்து நின்று கை கொட்டி ஆடும் கூத்தாகும்.*
படுபறை பல வியம்பப் பல்லுருவம் பெயர்த்து நீ
கொடுகொட்டி யாடுங் காற் கொடுய ரகல் குறிக்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்ட சீர் தருவாளோ
*- கலித்தொகை ; கடவுள் வாழ்த்து 5:7*

**பாண்டரங்கம் கூத்தாடல்**

*இது சிவன் திரிபுரங்களையும் அழித்து நின்று, எரிந்த சாம்பலைப் பூசிக்கொண்டு ஆடிய கூத்தாகும்.*
மண்டமர் பல கடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ
*- கலித்தொகை ; கடவுள் வாழ்த்து 8 -10*

**கபாலக் கூத்தாடல்**

*இது சிவன் எல்லாவற்றையும் அழித்து மண்டையோட்டைக் கையில் ஏந்தி அடிய கூத்தாகும்.*
கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்- புரளத்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கான்
முலையணிந்த முறுவலாண் முற்பாணி தருவாளோ;
*-கலித்தொகை ; கடவுள் வாழ்த்து 11 - 13*

**('உண்மை' இதழ் - 14.05.1970)**

**- தொடரும்**









பெரியார் நம்பி

# நாட்டிற்குத் தேவை நாத்திகமே!

670 கோடி மக்கள் வாழும் இவ்வுலகில் 50 முதல் 75 கோடி மக்கள் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகர்களாக வாழ்கிறார்கள். கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பலகட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்தப் புள்ளி விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடுகளில் நாத்திகமும் வேகமாக வளர்ந்து வருவதாக கலிபோர்னியா பிட்சர் கல்லூரியின் பேராசிரியார் பில் ஜுகர்மேன் கூறுகிறார். வளர்ச்சி பெறாமல் பின் தங்கியுள்ள நாடுகளில் மதம் இன்னமும் மக்களின்மேல் ஆதிக்கம் செலுத்துவதால் இந்த நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கமும் விரைவாக உள்ளது.

**நாத்திகர்கள் அதிகம் வாழும் பத்து நாடுகள்**

1. ஸ்வீடன் 46.85%,
2. வியட்நாம் 81%
3. டென்மார்க் 43.80%
4. நார்வே 31.72%
5. ஜப்பான் 64.65%
6. செக் குடியரசு 54.61%
7. பின்லாந்து 26.80%
8. பிரான்ஸ் 43.54%
9. தென்கொரியா 30.52%
10. எஸ்டோனியா 49%

அய்ரோப்பா, வட அமெரிக்க போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் மக்களிடம் கடவுளைப் பற்றியும் மதத்தைப்பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, மக்கள் கடவுள் என்பதில் முழுமையான நம்பிக்கையில்லை (Absolutely Not Believe in God) எனக்கு மதத்தில் நம்பிக்கையில்லை (I am Not into Religion) என்று அளித்த பதிலின் அடிப்படையில் இந்தப் புள்ளி விபரங்கள் மிகச்சரியானவையே என்று உறுதிப் படுத்தப்பட்டது.

நாத்திகர்கள் வழக்கம்போல் இளைஞர்கள், ஆண்கள், அதிகம் படித்தவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் சரியான தேர்வையே ஆதரிப்பவர்கள். பெண்ணுரிமை ஆதரவாளர்கள், மனிதாபிமானவர்கள், உடலை வருத்தும் தண்டனைகள் அளிப்பதற்கு எதிரானவர்களாக இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக வாழக் கூடியவர்கள் என்று மக்கள் தொகையியல் ஆய்வுகள் காட்டுகின்றன

இந்தியாவில் 3 சதவீதம் பேர் நாத்திகர்களாக இருப்பதாக 2004 - ல் பி.பி.சி. நடத்திய ஆய்விலும் 5 சதம் பேர் நாத்திகர்களாக இருக்கிறார்கள் என்று நோரிஸ் மற்றும் ஈங்கிள்-ஹார்ட் என்னும் இரண்டு பிரிட்டிஷ் ஆராய்சியாளர்கள் கண்டுள்ளனர் என்று ஜுகர்மேன் தெரிவிக்கிறார். இந்தச் செய்தி நாத்திகர்களைப்பற்றி இணைய தளத்தில் தேடிய போது கிடைத்தக் கட்டுரை. இது 2010-ல் டைம் ஆஃப் இந்தியா நாளிதழ் வெளியிட்டதாக அந்தக் கட்டுரை முடிகிறது.

உலகில் மற்ற நாடுகளில் உள்ள நாத்திகத்திற்கும் இந்தியாவில் உள்ள நாத்திகத்திறகும் அதிக வேறுபாடுகள் உள்ளது. மற்ற நாடுகளில் கடவுளையும் மதத்தை மட்டும் மறுத்தால் போதும். ஆனால் இந்தியாவில் கூடதலாக, சாதியையும் மறுத்து அதற்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது. தோழர் பெரியார், நாத்திகம் தொடர்பாக சொன்ன கருத்து இந்தியாவிற்கு மிகவும் பொருத்தமானதாக இன்றும் இருக்கிறது.

“மனிதனை மனிதன் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது போன்ற தீண்டாமைக் கொடுமைகள் தாண்டவமாடுகின்ற ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலை கொண்டு எரிக்காமலோ, சமுத்திரம் பொங்கி மூழ்கச் செய்யாமலோ,

சண்டமாருதத்தால் துகளாக்கப்படாமலோ இருப்பதைப் பார்த்த பிறகும், கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் சர்வ தயாபரர் என்றும் நம்பும் மக்களை என்னவென்று சொல்லுவது”

என்று சமூகம் சார்ந்த நாத்திகம் பேசினார். உலகில் மற்றவர்கள் நான்கு சுவர்களுக்குள் பேசிய நாத்திகத்தை பெரியார் மக்கள் மத்தியில் பட்டி தொட்டியெல்லாம் மூலைமுடுக்கெல்லாம் பேசினார். நாத்திகத்தை இங்கு இயக்கமாக அதுவும் மக்கள் இயக்கமாக நடத்தினார். இந்தச் சிறப்பு தோழர் பெரியாரைத் தவிர உலகில் வேறு எந்தத் தலைவருக்கும் இல்லை. நாத்திகம் பேசி தன் வாழ்நாளில் வெற்றியும் கண்டவர் பெரியார் மட்டுமே.

மேற்கண்ட கட்டுரையில் உள்ளதைப்போல் இளைஞர்கள் ஆண்கள் அதிகம் படித்தவர்கள் மட்டும் பேசிய நாத்திகத்தை இங்கு இளைஞர் முதியோர் என்ற பாகுபாடில்லாமல் படிக்காத பாமரனையும், பெண்களையும் நாத்திகம் பேச வைத்தத் தலைவர் பெரியார் மட்டுமே. சாமி இல்லாத கட்சிகாரன் என்று தத்துவத்தைச் சொல்லி அடையாளம் காணும் நிலையை உருவாக்கினார்.

> **“ மற்ற மாநிலங்களில் கால் பதித்த பஜக இங்கு கால் பதிக்க முடியாமல் திணறுவதற்கும் பெரியார் பேசிய நாத்திகமே காரணம்.**

நாத்திகம் பேசி, பண்பட்டதால்தான் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோதும், பாபர்மசூதி இடிக்கப்பட்டபோதும், இரு மிகப் பெரிய கலவரங்களை நாடு சந்தித்தபோது தமிழகம் மட்டும் எவ்வித பாதிப்புமின்றி அமைதியாக இருந்தது. மற்ற மாநிலங்களில் கால் பதித்த பஜக இங்கு கால் பதிக்க முடியாமல் திணறுவதற்கும் பெரியார் பேசிய நாத்திகமே காரணம்.

பா.ஜ.க எந்தப் பிள்ளையாரையும் இராமனை வைத்து அரசியல் களமாடுகிறதோ அந்தப் பிள்ளையாரைத் தெருவில் போட்டு உடைத்தும் இராமன் படத்தைச் செருப்பால் அடித்தும் எரித்தும் தவிடு பொடியாக்கியதால் தான் இராமன் பிள்ளையார் செல்வாக்கு தமிழகத்தில் எடுபடாமல் போய்விட்டது. அதனால்தான் மிகப்பெரிய பணபலம், அரசியல், அதிகார பலத்தை முழுமையாகப் பயன்படுத்தியும் பா.ஜ.க இங்கு செல்லாக் காசாகி விட்டது. நாத்திகர்களுக்குப் பாதுகாப்பான இடம் தமிழகமேயாகும்.

தமிழகத்திற்கு வெளியே பெங்களூரு, டெல்லி போன்ற இடங்களில் நாத்திகம் பேசுபவர்கள் அறிஞர்களாக இருந்தாலும் சுட்டுக் கொல்லப்படுவதும், வெட்டிக்கொல்லப்படுவதும், நாத்திகம் பேசுபவர்களை அச்சுறுத்துவதாக இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் உடனே எதிர்விளைவுகள் ஏற்படும் என்பதாலும் இங்கு சாமானியனும் நாத்திகம் பேசுவதாலும், நாத்திகம் இங்கு மக்கள் இயக்கமாக இருப்பதாலும் இங்கு நாத்திகர்கள்மேல் கைவைக்க அச்சப்படுகிறார்கள். பா.ஜ.க வட நாடுகளில் சங் பரிவாரங்களை கட்டவிழ்த்துவிட்டு ஆடுகின்ற ஆட்டத்தைப் பார்க்கும் போது நாடு முழுவதற்கும் நாத்திகம் கட்டாயம் தேவை என்பதை உணர்த்துகிறது.

கடவுள் நம்பிக்கை நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய தடையாக உள்ளது. இந்தியாவில் கடவுள் நம்பிக்கை தனிமனிதனின் நம்பிக்கை சார்ந்த விசயமாக இல்லாமல், மனிதர்களை பிறப்பின் அடிப்படையில் பிரித்து கூறு போட்டு வைக்கும் சாதியைப் பாது காக்கும் பணியினையும் சிறப்பாக செய்து வருகிறது.

இந்திய கிராமங்களில் நடைபெறும் அத்துனைக் கலவரங்களுக்கும் அனால் ஏற்படும் படுகொலை களுக்கும் கடவுள்களுக்கு கொண்டாடப்படும் திரு விழாக்களும் பிறந்த நாட்களுமே காரணம். விழிம்பு நிலை மக்களை பொருளாதார நிலையில் முன்னேறவிடாமல் தடுப்பதும் இந்த திருவிழாக் களேயாகும். 2000 மக்கள் தொகையுள்ள கிராமத்தில் நடைபெறும் ஒரு திருவிழாவில் செய்யப்படும் செலவு 20 இலட்சம் முதல் 30 இலட்சம்வரை ஆகிறது. ஆனால் அவர்களின் குழந்தைகளின் கல்வி செய்யப்படும் செலவோ இரண்டு லடசத்தைக்கூடத் தாண்டாது.

கடவுள் நம்பிக்கையின்பேரால் கொண்டாடப் படும் தீபாவளி, கோவில் திருவிழாக்களில் வாண வேடிக்கை என்னும்பெயரில் கொளுத்தப்படுகின்ற பாட்டாசுப் புகையினால் ஏற்படும் மாசு கெடுதலால் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து இந்தியாவில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதற்கும் - கடவுள் நம்பிக்கையின் பேரால் கொண்டாடப்படும் திருவிழாக்கள்தானே காரணம்.

மேற்கண்ட கட்டுரையைப் போல் மதம் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நாடுகளில் மக்கள் தொகை பெருக்கம் விரைவாக உள்ளது என்பதற்கு இந்தியா மிகப்பெரிய சான்றாக உள்ளது. குழந்தைப் பிறப்பைக்கூட கடவுள் தந்த வரம் என்று இங்கு நம்புவதால்தான், உலகில் மக்கள் தொகையில் முதலிடத்தை ஒருசில ஆண்டுகளில் எட்டிப் பிடித்து விடும் என்ற அபாயமும் நம்மை அச்சுறுத்து கிறது. எனவே உலகில் மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்தியாவின் வளர்ச்சிக்கும், மக்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு இந்த நாட்டிற்குத் தேவை நாத்திகமே.



# தெய்வத்தை ஒதுக்கிவிட்ட ஆட்சி

கடவுளையும் தர்மத்தையும் காப்பாற்றப் புறப்பட்டிருப்பதாக அடிக்கடி கூறிக் கெண்டிருக்கிற திரு. ஆச்சாரியார் அவர்கள் இன்னறய ஆட்சியை நாத்திக ஆட்சி என்றே கூறினார்.

‘தெய்வத்தை ஒதுக்கிவிட்ட ஆட்சி’ என்ற தலைப்பில் 8.12.1961 ‘கல்கி’யில் தம் கையெழுத்துடன் எழுதியிருந்த தலையங்கத்தில்,

“நாட்டின் தலைவர்களும் மன்னர்களும் மக்கள் ஒப்புக்கொண்ட எல்லாச் சமயங்களையும் மதங்களையும் போற்றிவர வேண்டும்” என்றும், “மடையர்களின் பூசல்களைக் கண்டு பயந்து, எந்த சமயமும், எந்தமதமும் வேண்டா மென்று, தெய்வத்தையே ஒதுக்கிவிட்டு, உடுப்பு அணிந்த போலீஸ்காரர்களையே நம்புவது பெரிய அறியாமை யாகும்” என்றும், “ தர்மத்துக்கு வரிபோடுவது அறிவற்ற அரசாட்சி முறையாகும்” என்றும் எழுதியிருந்தார்.

இவர் இவ்வாறு பேசுவதும் எழுதுவதும் திரு.பண்டிட்நேரு அவர்களையும், திரு. காமராசர் அவர்களையும் மனத்தில் கொண்டு தான் பேசுகிறார், எழுதுகிறார் என்பதை அறியாதவர்கள் இல்லை. ஏனெனில், இந்த நாட்டிலுள்ள எல்லா மந்திரிகளிலும், இந்த இரண்டுபேர் மட்டும்தான் ‘கடவுள்’ என்றோ, ‘தலைவிதி’ என்றோ ‘மதக் கட்டளை’ என்றோ கூறாதபடி பேசிவருகிறவர்கள் ஆவர். இதுமட்டு மல்ல. இருவரும் திடீரென்று இவற்றையெல்லாம் கண்டித்தும்கூடப் பேசி விடுகிறார்கள்.

தமக்கு அதிகாரம் இருக்குமானால் சோதிடர் களையும் மந்திரவாதிகளையும் சிறையில் தள்ளி விடுவேன் என்றுகூட திரு.நேரு அவர்கள் ஒருமுறை பேசியிருக்கிறார்.

இதோ, மூன்று வாரங்களுக்கு முன்னர், சிண்டிஆடம்ஸ் என்பவருடன் பேசிக் கொண்டிருக் கையில் “நான் மதவாதியல்ல, என்னை மதநம்பிக்கையற்றவன் என்றே கூறுகிறார்கள். மதங்களின் சட்ட திட்டங்கள், சடங்குகள் முதலியவற்றை நான் நம்புவதில்லை” என்று இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் திட்டவட்டமாகக் கூறுயிருக்கிறார்.

மே.கா.கிட்டு



இவரது நூல்களிலும் பல இடங்களில், தாம் ஒரு பகுத்தறிவுவாதி என்பதை வெளிப்படையாகவும் அழுத்தமாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அடுத்த மாதத்தில் எட்டுக்கிரகங்கள் ஒன்றுசேருவது பற்றிச் சென்றவாரம் பேசும்போதுகூட, "இதனால் உலகத்துக்கு ஒரு கேடும் வராது" என்று கூறியுள்ளார்.

அதாவது, மதத்தின் பெயராலும், கடவுள் பெயராலும் தலைவிதி என்ற பெயராலும் மக்கள் ஏமாற்றப்படுவதை அறவே வெறுக்கும் ஒருசில உலகப் பெருந்தலைவர்களில் திரு.நேருவும் ஒருவர்.

ஆனால், ஆச்சாரியாரோ இதற்கு நேர் மாறானவர். இவற்றிலெல்லாம் சொந்த முறையில் தமக்கு நம்பிக்கையில்லாதிருந்தும் மக்களை அடிமைகளாகவும், மடையர்களாகவும் ஆக்கி வைத்திருப்பதற்காக மட்டும் இவற்றை நம்புகிறவர்கள் போல எழுதிவருகிறார். ஆனால், காமராசர் அவர்களோ நாத்திகர் அல்லது பகுத்தறிவுவாதி என்று தம்மைச் சொல்லிக் கொள்ளாமலே நடைமுறையில் பச்சைப் பகுத்தறிவுவாதியாக இருந்து வருபவர்.

முன்பு, தலைவிதி நம்பிக்கையைப்பற்றி இவர் கண்டித்துப்பேசியது நினைவிருக்கலாம். இதோ, சென்ற டிசம்பர் 31 ம் தேதியன்று இராஜபாளையத்தில் பேசுகையில், இவர் கூறியிருப்பதைத் தருகிறோம்.

> "ஏழைகளை வாழவைப்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஒருவேளையாவது நல்லபடி சாப்பிட வகை செய்ய வேண்டாமா? படிக்க வழிசெய்ய வேண்டாமா? இதைச் செய்தால் காங்கிரஸ் ஒழியணும் என்கிறார்கள். மரம் வைத்தவன் தண்ணீர் விடுவானாம்! இது தர்மமாம்! ஏழைகளை ஆண்டவன் காப்பாற்றுவான் என்கிறார்கள். மரம்வைத்தவனும் தண்ணீர் ஊற்றவில்லை, மற்றவர்களும் ஊற்றவில்லை. இதை நான் பார்த்தபிறகுதான் ஏழைகளுக்குச் சர்க்கார்தான் வசதிசெய்ய வேண்டும் என்கிறேன்."

ஆச்சாரியாருக்கு இன்றைய ஆட்சிமீது ஏன் ஆத்திரம் வருகிறது என்பது விளங்குகிறதல்லவா? தமிழ்நாட்டிலோ, திரு.காமராசர் பாமர மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து 'நாத்திக' ஆட்சி நடத்துகிறார். டில்லியிலோ திரு. நேரு அய்ந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நாட்டின் ஏழ்மையை ஒழிப்பதற்கான திட்டம் வகுத்துக்கொண்டு 'நாத்திக' ஆட்சிநடத்திவருகிறார்.

ஏழ்மையை ஒழித்துவிட்டால் கடவுளுக்கும் மதத்திற்கும் மதிப்பிருக்காதே! எல்லோருக்கும் படிப்பைத் தந்துவிட்டால் உயர்சாதிகளுக்கு மதிப்பிருக்காதே! அதனால்தான் தர்மம் கெட்டுவிட்டது! நாத்திகஆட்சி நடக்கிறது என்று ஓலமிடுகிறார் ஆச்சாரியார் அவர்கள்.

பிறப்பினால் சாதி! படிப்பினால் சாதி! பணத்தினால் சாதி! இந்த மூன்றுதுறைகளையும் சமமாக்கி, மேடுகளை வெட்டிப் பள்ளத்தில் போட்டு நிரப்பிவிட்டால் இந்தநாடும் பிறநாடுகளைப் போல முன்னணியில் நிற்குமல்லவா?

**"எல்லாச்சாதிகளும் படித்துவிட்டால் வேலை எங்கிருந்து கிடைக்கும்? வண்ணார் பிள்ளைகள் துணிவெளுக்கவும் மற்றவர்களும் அவரவர் குலத்தொழிலைச் செய்யவும் கற்றுக்கொண்டால் போதும்"** என்று அன்று முதல், இன்றுவரை கூறிவருகின்ற ஆச்சாரியாருக்கும் (இராஜாஜி) இந்த இரு தலைவார்களின் (நேரு, காமராசர்) போக்கு "தெய்வத்தை ஒதுக்கிவிட்ட ஆட்சி" யாகத்தானே தோன்றும்?

அதனால், "சுதந்திரம் என்பது சர்வ நாசமாகிவிடும் என்பதும் எனக்குப் புலனாகிறது" என்று "என் கோபத்திற்குக் காரணம்" என்ற தலைப்பில் 29.10.61 'கல்கி' யில் கையெழுத்துடன் தலையங்கம் எழுதியிருப்பவரல்லவா ஆச்சாரியார்?



அதனால்தான் சோசலிசப்பாதையில் செல்கின்ற காங்கிரஸ் ஆட்சியின் காலை வாரிவிடுவதற்குக் கச்சை கட்டப் புறப்பட்டிருக்கிறார்.

நாம் அடிக்கடி கூறிவருவதுபோல் இந்த நாட்டில் இரண்டு நல்லதலைவர்கள் ஜனநாயகச் சேற்றில் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள். நேருவோ "காமராசரோ இந்த நாட்டில் சர்வாதிகாரி ஆக நேரிட்டால் ஒரே அய்ந்தாண்டுத் திட்டத்தில் இந்நாட்டின் வறுமையையும் படிப்பின்மையையும் மூடநம்பிக்கைகளையும் மதவெறியையும் சாதிக் கிறுக்கையும் ஒழித்துக் கட்டிவிடுவார்கள் என்பது நம்நம்பிக்கை!

இவ்வளவு ஊழல்களிலும் அழுந்திக் கிடக்கின்ற இந்நாட்டு மக்களின் வாக்குகளில் நம்பிக்கை கொண்டிருக்கிற வரையில் இவர்களால் எந்தக்காரியத்தையாவது துணிந்து செய்ய முடியுமா? கம்பிமீது சைக்கிள் விடுவதுபோல பயந்துபயந்து ஆட்சிநடத்தும்போதே ஆச்சாரியார் திருக் கூட்டத்தார் "அய்யோ! கடவுளை ஒதுக்கிய ஆட்சி நடக்கிறதே" என்று ஓலமிடுவது அயோக் கியத்தனம் அல்லவா?

(தோழர் மே.கா கிட்டு தொகுத்து, தோழமை வெளியீடாக வந்துள்ள 'காரியக் காமராசர் பற்றி காரணப் பெரியார்' நூலில் இருந்து)



மதுரை தீபன்

# பக்தியால் வீணாகும் விட்டமின் 'சி'

படிப்பறிவு இல்லாத காலம் முதல் இன்று விஞ்ஞானம் வின்னை நோக்கி செல்லும் காலம் வரை மூடநம்பிக்கைகளுக்கு பஞ்சமே இல்லை. எண்ணற்ற மூடநம்பிக்கைகள் இருந்தாலும் எலுமிச்சை பழம் சார்ந்த முடநம்பிக் கைகள் அதிகம் உண்டு. தினசரி வாழ்க்கையில் அதிகம் காணப்படும் சில மூடநம்பிக்கைகள்:

எலுமிச்சை மற்றும் ஏழு மிளகாயைக் கயிறால் கோர்த்து வீடு மற்றும் வாகனங்களின் முன்னால் தொங்கவிடுவது

வாகன சக்கரத்தின் அடியில் எலுமிச்சை பழத்தை நசுக்குவது

திருஷ்டி கழிப்பது எனக்கூறி எலுமிச்சம் பழத்தைத் தலையைச் சுற்றி எறிவது

எலுமிச்சையை அறுத்து குங்குமும் கலந்து வீட்டிற்கு முன்னால் எறிவது

வேலாயுதம், சூலாயுதம் மற்றும் கோவிலில் உள்ள அனைத்து ஆயுதங்களிலும் குத்தி வைப்பது

இவ்வாறு எலுமிச்சையை வீண் செய்வதற்கு எந்த ஆதாரப்பூர்வமான அறிவியல் காரணங்களும் இல்லை. எலுமிச்சையின் மனம் கிருமி நாசினியாகச் செயல்படும் என நம் மூடநம்பிக்கை நண்பர்கள் கூறினாலும் அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

எலுமிச்சையை மூடநம்பிக்கைக்காக பயன் படுத்தும் நண்பர்கள் கவணிக்க வேண்டிய சில தகவல்கள்:

எலுமிச்சையின் சொந்த ஊர் இந்தியா. ஆண்டிற்கு இந்தியாவில் உற்பத்தியாகும் எலுமிச்சை 2.5 பில்லியன் டன் ஆகும். எலுமிச்சையின் பலன்கள் என்னவென்றால், புற்றுநோய் செல்கள் வராமல் தடுக்கும். வயிற்றுப் போக்கு மற்றும் அஜீரணக் கோளாறுகள் வராமல் தடுக்கும். நுரையீரல் செயல் பாட்டைச் சிறப்பிக்கும். வைட்டமின் 'சி' அதிகம் உள்ள ஒரே பழம். உடலில் தொற்றுக் கிருமிகள் வராமல் தடுக்கும்.

பயிரிட்டு மூன்று வருடம் காத்திருந்து பல தடைகளைத் தாண்டி பழம் ஈட்டும் நிலையை அடைந்தபின் நமக்கு தருகிறார் விவசாயி. இத்தனை மருத்துவ குணங்கள் நிறைந்த எலுமிச்சையை தேவையான மக்களுக்கு கொடுத்து உதவுவோம். வாகனங்களின் டயர்களில் வைத்து நசுக்க வேண்டாம். வாகனங்களை ஓட்டத் தொடங்கும் போது அதே எலுமிச்சையைச் சாறு பிழிந்து குடியுங்கள். வேல்களிலும், சூலாயுதங்களிலும் குத்தியும், தெருவில் அறுத்தெறிந்தும் வீணாக்க வேண்டாம்.

# தேவதாசி முறையை ஒழித்த முத்துலட்சுமி அம்மையார்

இந்தியாவின் முதல் பெண் மருத்துவராகிய முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் நினைவு நாள் இந்த நாள் 22.7.1968. பெண்கள் அந்தக் காலத்தில் அதுவும் கல்லூரியில் படிக்க வேண்டுமென்றால், அது சாதாரணமான ஒன்று அன்று புதுக்கோட்டை மன்னரின் சிறப்பு அனுமதி பெற்று கல்லூரியில் சேர்க்கப்பட்டார்என்ன ஏற்பாடு? மாணவர் களுக்கும் இந்தப் பெண்ணுக்கும் இடையே ஒரு திரை இருக்கும் ஆசிரியருக்கும் மட்டுமே இந்தப் பெண் தெரிவார். இந்தத் திரைகளையெல்லாம் கிழித்துத் தான் முத்துலட்சுமிகல்வியின் சிகரத்தை எட்டினார்.

நீதிக்கட்சி ஆட்சியில்தான் இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெண்களுக்கு வாக்குரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் காரணமாக அம்மையார் ஒருமனதாக சென்னை மாநில மேல் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். தேவதாசி ஒழிப்புச் சட்டம். விபசார ஒழிப்புச் சட்டம், பெண் களின் திருமண வயது உயர்த்தும் சட்டம் இவற்றிற் காகப் பெரும் குரல் கொடுத்தார். குறிப்பாக தேவதாசி ஒழிப்புச் சட்டம் (பெண்களின் பொட்டுக் கட்டி கோவிலுக்கு விடுவதை ஒழித்த சட்டம்) அம்மையாரை என்றென்றும் நினைவ கூறச் செய்வதாகும்.

கவிஞர் கலி.பூங்குன்றனின்,
'ஒற்றைப்பத்தி' நூல்






### திருச்சியில்

# மகள் தலைமையில் தாய்க்கு ஜாதிமறுப்புத் திருமணம்

திருச்சியில் பேராசிரியராகப் பணியாற்றுபவர் கனிமொழி. மணவிலக்குப் பெற்றவர். 'மயூரி' என்ற பெண் குழந்தைக்குத் தாய். திருச்சியில் Event Management தொழில் நடத்தி வருபவர் குளித்தலையைச் சேர்ந்த சத்தியசீலன். திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்தவர். இருவரும் காட்டாறு இதழ் குழுவுடன் தொடர்பில் இருப்பவர்கள். காட்டாறு ஏடு வளரத் துணைபுரிபவர்கள். இந்த ஒற்றுமை அவர்களை வாழ்விலும் இணைத்தது.

கரூரில் வசிப்பவர் Geologist மோகன்தாஸ். அவர் சத்தியசீலனுக்கு நெருங்கிய நண்பர். அவரும் காட்டாறு ஆதரவாளர். அவரிடம் சத்தியசீலன், தனக்கு வாழ்க்கைத் துணை தேவை என்பதைத் தெரிவித்து, தனக்கு வரும் துணைவர் வேறு சாதியில் தான் இருக்க வேண்டும். குறிப்பாக, மணவிலக்குப் பெற்றவர் அல்லது துணையை இழந்தவராக இருந்தால் நல்லது என்று கூறியுள்ளார். தோழர் மோகன்தாஸ் திருச்சி பேராசிரியர் புரட்சிக் கொடியை அணுகினார். இப்படித்தான் கனிமொழி - சத்தியசீலன் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் உருவாகியது.

இத்திருமணத்தில் சாதி, மதச் சடங்குகள் பலவற்றை முற்றிலுமாகத் தவிர்த்தனர். பார்ப்பனரை அழைக்கவில்லை. மேடையில் எந்த ஜாதி, மதச் சடங்குகளும் நடத்தப்படவில்லை. சுயமரியாதைத் திருமணங்களில் தலைவர்கள் உரையாற்றுவதைப் போல, கருத்துரைகளும் இல்லை. மைக் வைக்கப் படவே இல்லை. வாழ்க்கைத் துணை ஒப்பந்தத்தைக் கூட மணமக்கள் அவரவர்களே படித்துக் கொண்டனர். மாலைகளை எவரும் எடுத்துக் கொடுக்கவில்லை. அவரவர்களே எடுத்து சூடிக் கொண்டனர். இந்தத் திருமணம் எப்படி நடக்கப் போகிறது என்பதை 2 நிமிடத்திற்குள் தோழர் தாமரைக்கண்ணன் விளக்கிப் பேசினார். மொத்தம் 5 நிமிடத்திற்குள் திருமண நிகழ்வுகள் இனிதே முடிவடைந்தன.

இந்தத் திருமணத்திற்கு மணமக்கள் இருவரின் பெற்றோர், குடும்பத்தினர், அவர்களது உறவினர்கள், அனைவரும் மிகப்பெரும் ஒத்துழைப்பைக் கொடுத்தனர் என்பது மிகவும் முக்கியமானது. கனிமொழியின் மகள் மயூரி மிகவும் மகிழ்வுடன் தொடக்கம் முதல் இறுதி வரை மேடையிலேயே இருந்தார். இதுபோல, பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்படும் ஜாதிமறுப்புத்திருமணங்கள் காட்டாறு குழுவில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்வு 09.07.17 -ல் திருச்சியில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழக கரூர் மாவட்டப் பொறுப்பாளர் தோழர் பாபு, திருச்சி மாவட்ட அமைப்பாளர் தமிழ்முத்து, தோழர் புதியவன் ஆகியோர் குடும்பத்துடன் கலந்து கொண்டார். சி.ஐ.டி.யு வின் துப்புரவுத் தொழிலாளர் சங்க மாவட்டப்பொறுப்பாளர் தோழர் மணி மாறன், த.மு.எ.க.ச வின் மாவட்டப் பொருளாளர் தோழர் ரெங்கராஜன் ஆகிய தோழர்களும் பங்கேற்று வாழ்த்திச் சென்றனர்.

எம்.ஆர்.இராதா கலைக்குழுவினரின் வீதி நாடகங்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. காட்டாறு குழு தோழர்களும் கருந்திணைப் பண்பாட்டுக் குடும்பங்களும் ஏராளமாகப் பங்கேற்றனர். திருமணங்களில் நேரம், பணம் போன்றவற்றை வீணாக்க வேண்டாம். பார்ப்பனரை அழைத்து - ஜாதி, மதச் சடங்குகளை நடத்தி நம்மை நாமே இழிவு படுத்திக் கொள்ள வேண்டாம். திராவிடர் இயக்கத் தலைவர்களை அழைத்து அவர்களது நேரத்தையும், உழைப்பையும் வீணாக்க வேண்டாம்.

நம் தலைவர்கள், திருமணங்களுக்கு வந்து ஒப்பந்தங்களைப் படித்துக்காட்டிவிட்டுச் செல்வதற்காக, நேரத்தையும், பணத்தையும் செலவழித்து வருகிறார்கள். அந்த நேரம் அவர்களுக்குப் படிப்பதற்கோ, எழுதுவதற்கோ, ஓய்வெடுப்பதற்கோ பயன்படும். திராவிடர் இயக்கத் தலைவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். அவசியம் தலைவர்கள் நம் வீட்டுத் திருமணங்களில் பங்கேற்க வேண்டும் என்றால், வீடியோ கான்ஃபரன்ஸில் கூட பங்கேற்கலாம்.

பகுத்தறிவற்ற பக்தர்களின் திருப்பதி லட்டுகூட ஆன்லைனில் கிடைக்கிறது. சபரிமலை தரிசனம் ஆன்லைனில் புக் ஆகிறது. சிறைக்கைதிகளுக்குக்கூட வீடியோ கான்ஃபரன்சில் விசாரணைகள் நடக்கிறது. பகுத்தறிவாளர்கள் மட்டும் தலைவர்களைத் தொல்லைப்படுத்தி வருகிறோம். நாமும் மாறுவோம். சமுதாயத்தையும் மாற்றுவோம். சாதி, மதம், இனம், ஆடம்பரம் அனைத்தையும் தவிர்ப்போம். பார்ப்பான் புகை போட்டு விரட்டுவான். நாம் பேசிப் பேசியே விரட்டுவோம். இரண்டையும் தவிர்ப்போம். செயல்படுத்திக் காட்டுவதைவிடச் சிறந்த பரப்புரை வேறு எதுவும் இல்லை.

டாக்டர் .ஃபரூக் அப்துல்லா, சிவகங்கை

**சிசேரியன் என்றால் என்ன?**

பெண்கள் கர்ப்பமுற்று, கர்ப்பக் காலத்தில் அல்லது பிரசவிக்கும் நேரத்தில் ஏற்படும் இடர்களைக் களைந்து அடி வயிற்றில் அறுவை செய்து கர்ப்பப்பையில் இருந்து குழந்தையை எடுக்கும் சிகிச்சை முறைக்கு பெயரே சிசேரியன் ஆகும். இதை மருத்துவ வழக்கில் Caesarean Section LSCS (Lower Segment) என்போம். இந்தச் சிகிச்சைமுறை பன்னெடுங் காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளது.

இந்தியாவில் கி.மு. 300 களில் மவுரிய அரசு ஆட்சியில் இருக்கும் போது, பிந்துசாரரின் தாயார் கர்ப்பமாக இருக்கையில், தவறாக விஷத்தை உண்டு விட இறந்து விடுகிறார். சந்திரகுப்தரின் ஆசிரியரும் அரசின் ஆலோசகருமான சாணக்கியர், இராணியின் வயிற்றைக் கிழித்து மகவை வெளியே எடுத்ததாக வரலாறு கூறுகிறது. இதே முறை ரோமானிய அரசுகளிலும் புழக்கத்தில் இருந்துள்ளது. இந்தச் சிகிச்சை முறையினால் நாம் அடைந்த நன்மை என்ன?

சுமார் 40 - 50 வருடங்களுக்கு முன்பெல்லாம் இந்த 'சிசேரியன்' நமது தமிழ் நாட்டில் அவ்வளவு பரிச்சயம் கிடையாது. கடந்த 30 வருடங்களாக இந்தச் சிகிச்சை நமது தமிழ்நாட்டில் பின்பற்றப் பட்டு வருகிறது. வீட்டில் பிரசவம் நடக்கையில், பிரசவத்தின் போது நிகழும் பல பிரச்சினைகளுக்கு நமக்கு வழி தெரியாமல் இருந்தது. கர்ப்பக் காலப் பரிசோதனைகள் மூலம் கண்டறியப்படும் பல பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு குழந்தை மற்றும் தாயின் உயிரைக் காக்க முன்னெச்சரிக் கையாக சிசேரியன் செய்யப் படுகின்றன.

**சிசேரியனுக்கான காரணங்கள்**

1. தாயின் இடுப்பெலும்பு குறுகிய தன்மை. இதை Cephalo pelvic Disproportion என்றோம். இதனால் குழந்தையின் தலை கீழே இறங்குவது தடைபடும். பிரசவம் நிகழாமல் குழந்தை உள்ளேயே இறந்து அதன் விளைவாகத் தாயும் இறப்பாள்.

பொதுவாக 140 - 145 CM அளவுக்குக் கீழ் வளர்ச்சி உள்ள தாய்மார்களுக்கு, இடுப் பெலும்பு குறுகலாக இருக்கும். இன்னும் வளர்ந்த தாய்மாரில் சிலருக்கும் கர்ப்பக் காலத்திலும் இடுப்பெலும்பு அளவு குறுகலாக இருப்பது கண்டறியப்படுகிறது. சிலருக்குக் குழந்தையின் தலை பெரிதாக இருப்பதால் இந்த நிலை ஏற்படும்.

2. அசாதாரண குழந்தை இருப்பு நிலை. ( Abnormal Presentation) குழந்தையின் தலையானது, கீழ் நோக்கி இருப்பது சாதாரண நிலை. 100 க்கு 95 சதவிகிதம் சாதாரண நிலையிலும், 5 சதவிகிதக் குழந்தைகள் குதம் கீழாகவோ பக்கவாட்டில் படுத்துக்கொண்டோ இருக்கும். இத்தகைய தன்மைகள் ஸ்கேன் மூலம் கண்டறியப்பட்டு இறுதி வரை அவை தலைகீழ் நிலைக்கு வரவில்லையெனில், சிசேரியன் மூலம் எடுக்கப் படுகின்றன

3. தாய்க்கு இரத்தக் கொதிப்பு மற்றும் அதை ஒட்டிய பிரசவத்தின் போது வரும் வலிப்பு நோய் இதை (Eclampsia) என்று கூறுவோம். இத்தகைய கர்ப்பிணிகளை தொடர் சோதனைகள் மூலமே கண்டறிகிறோம். இவர்கள் பிரதிமாதம் மருத்துவரை சந்தித்து, இரத்த அழுத்தம் சோதிக்கப்பட்டு, ஸ்கேன் மூலம் குழந்தையின் நலத்தைச் சோதித்து, இரத்த அழுத்த மாத்திரைகள் மூலம் கட்டுக்குள் வைக்கப் படுகிறது .




இந்தநோயினால் பிரசவமாகும் போது வலிப்பு வந்து பல தாய்மார்கள் இறக்க நேரிருடுகிறது. இந்த வகை இழப்புக்குக் காரணமாக இருப்பதால் இத்தகையோருக்கு அவர்களது கர்ப்பக் கால முடிவில் சிசேரியன் செய்து குழந்தை எடுக்கப் படுகிறது.

4. கர்ப்பக் காலத்தில் தாய்மார்களுக்கு நீரிழிவு வருவதைக் கண்டறிந்து, அவர்களுக்கு உணவு முறை மாற்றம் மற்றும் இன்சுலின் சிகிச்சை அளிக்கப்

படுகிறது. இத்தகையோரின் குழந்தை சாதாரண நிலையை விட அதிகமாக வளரும் தன்மையுடன் இருக்கும். இதை Macrosomia என்றோம்.

இத்தகைய குழந்தைகள் பிறக்கையில் 4 முதல் 5 கிலோவுடன் தலை பெரிதாக இருக்கும். ஆகவே இத்தகைய தாய்மார்களும் சிசேரியன் செய்யபடும் வாய்ப்பு அதிகமாகிறது

5. இரட்டைக் கர்ப்பம் கொண்ட தாய்மார் களுக்கு சிசேரியன் செய்யப்பட்டு குழந்தைகள் எடுக்கப்படுகின்றன. இதனால் குழந்தைகள் இறப்பு குறைகிறது. தாய்மார்கள் இழப்பும் குறைகிறது.

6. தாய்மார்களுக்கு இதய நோய் இருப்பின் அவர்களால் பிரசவக்கால வலி மற்றும் ஆற்றல் விரயத்தைத் தாக்குப்பிடிக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிசேரியன் செய்யப்படுகிறது. இவையனைத்தும் தாய் -சேய் உயிர்களைக் கருத்தில் கொண்டு முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக சிசேரியன் செய்ய காரணங்களாக அமைகின்றன.

**மரபுவழி மந்திரவாதிகள்**

தற்போது சில நாட்களாக, சிலர் மரபு வழிப் பிரசவம் பார்க்கிறோம் என்ற பெயரில் வீட்டிலேயே பிரசவம் பார்ப்பதை ஊக்குவிப்பதைக் காண முடிகிறது. மேலும் சிலர் தாங்கள் தங்கள் மனைவிக்கு வீட்டிலேயே பிரசவம் பார்த்ததை மிகவும் நல்ல விசயம் போல் பதிவிட, அதற்குப் பலரும் பாராட்டுத் தெரிவிப்பதும் நம் சமூகம் ஏன் சிந்தனையற்று, இத்தனை அறிவீனத்தை ஆதரிக்கிறது என்று தெரியவில்லை. இருப்பினும் ஒரு மருத்துவனாக என்னால் இப்படியான செய்திகளை எளிதாகக் கடந்து செல்ல முடிவதில்லை.

காரணம். அரசு மருத்துவர்களாகிய நாங்கள் ஒவ்வொரு தாய், சேய் இறப்பிற்கும் கணக்குக் கூறுபவர்களாக இருக்கிறோம். ஆம்.. ப்ரைவேட், அரசாங்கம், ஏழை - பணக்காரன், சாதி, மத, இன பேதமின்றி எந்தத் தாய் பிரசவத்தின் போது இறந்தாலும், நாங்கள் அதை பகுத்து ஆராய்ந்து அந்த இறப்பைத் தடுப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்.

**அரசு ஏன் இத்தனை சிரத்தையுடன் தாய் இறப்பைக் கவனிக்கிறது?**

ஒருநாடு சுகாதாரத்தில் சிறந்து விளங்குவது என்பது, அந்த நாட்டின் மருத்துவத்துறை பிரசவத்தின் போது தாய்மார்களை எவ்வாறு கவனித்துக் கொள்கிறது? எவ்வாறு தாய் சேய் மரணத்தைத் தவிர்க்கிறது என்பதை பொறுத்தே அமைகிறது.

நமது தமிழ்நாட்டில் சுமார் முப்பது வருடத்திற்கு முன்பு வரை வீட்டில் மூதாட்டிகள் பிரசவம் பார்த்து வந்தனர். அப்போது ஸ்கேன் கிடையாது. டெடானஸ் தடுப்பூசி கிடையாது. மருத்துவமனைகள் இவ்வளவு கிடையாது. மருத்துவர்கள் இந்த அளவு இல்லை. அப்போது வேறு வழியே இல்லாமல் நம் முன்னோர் வீட்டில் பிரசவம் பார்த்து வந்தனர்.

தற்போது, மாவட்டத்துக்கு ஒரு மருத்துவ கல்லூரி அல்லது சிறப்பு மகப்பேறு மருத்துவமனை. ஒரு ஊருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம். இப்படி நமது சுகாதாரத் துறை வளர்ச்சி அடைந்த பின்பும் ஒரு கூட்டம் மக்களை பின்னோக்கி இழுக்கிறது.

“நாங்கள் முப்பது வருடங்களுக்கு முன்பு வரை நன்றாக மரபு வழிப் பிரசவம் பார்த்து சுபிக்ஷமாக தானே இருந்தோம்? இப்போது மாடர்ன் மருத்துவம் வந்து தான் தேவையற்ற ஸ்கேன்கள் செய்கிறது தேவையற்ற தடுப்பூசிகள் போடுகிறது. அதிகமாக ‘சிசேரியன்’ செய்து பிரசவத்தின் மூலம் காசு பார்க்கிறது”

என்று தவறான பல பொய்யுரைகளை கூறி, வீட்டில் பிரசவம் பார்ப்பது, தடுப்பூசி போடாமல் இருப்பது போன்ற பல விசயங்களை மக்களிடம் பரப்பிவருகிறது

**ஆனால் உண்மை என்ன?**

1990 களில் ஒரு லட்சம் பிரசவம் நடந்தால் அதில் 437 தாய்மார்கள் இறந்து வந்தனர். பிறகு மாவட்டத்தின் முக்கிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. தாய்மார்கள் இறப்பு விகிதம் 2001 ல் 327 ஆகக் குறைகிறது. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக்கல்லூரி ஏற்படுத்தப் பட்டு மருத்துவர்கள் அதிகமாக அரசுப்பணிக்கு வந்தனர். 2011 இல் மரண விகிதம் 178 ஆக இறங்கி வந்தது.

2015 கணக்குப்படி தமிழ்நாட்டில் இந்தத் தாய் இறப்பு விகிதம், 91 ஆக குறைந்து - தற்போது 70 களில் இருக்கிறது. உலகம் முழுவதும் நடக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் இறப்பில் இந்தியாவில் மட்டும் 25 சதவிகிதம் நடக்கிறது. இந்தியாவில் ஒவ்வொரு 5 நிமிடத்திற்கு ஒரு கர்ப்பிணித் தாய் மரணிக்கிறாள் என்கிறது ஆய்வு. (http://www.deccanchronicle.com/…/tamil-nadu-sees-low-matern…)

**ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும் போது ஏற்படும் பிரச்சனைகள்**

அவள் பிரசவிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகள், பிரசவித்த பின்பு ஏற்படும் பிரச்சனைகள் என பகுத்தாறாய்ந்து அதனை தடுக்க வழிகளை ஆலோசித்து, அதை நடைமுறைபடுத்தி, அதில் ஏற்படும் சிக்கல்களை களைந்து, பிரசவத்தின் போது ஏற்படும் தாய் மரணத்தை தடுக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி இரவு பகல் பாராமல் சுகாதார ஊழியர்கள் பாடுபட்டு வருகிறோம்.

ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் சமூக விரோதிகளின் வீண் பிரச்சாரங்களுக்குச் செவி மடுக்காமல், தங்களது வீட்டுப் பெண்களின் பிரசவங் களை மருத்துவமனைகளில் பார்த்துக்கொள்ள வேண்டுமாய் பணிவன்புடன் அனைத்து சுகாதார ஊழியர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்

தாராபுரம் பூங்கொடி




# 'கரு'வறையையே அறுப்போம்! சமையலறைகள் எம்மாத்திரம்?

காலையில் தினசரித்தாளைக் கையில் வைத்துக் கொண்டு நாட்டு நடப்புகளை மிகவும் வருத்தத்துடன் படித்துக்கொண்டே 'டீ' ரெடியா? என்று கேட்பார் கணவர். அதற்கு அந்தம்மாவும் இந்தா வந்துட்டேன் என்று சொல்லி டீயை ஆற்றிக்கொண்டே (சூடாகக் கொடுத்தால் அவர் வாய் வெந்துரும்ல) அவரிடம் கொடுப்பார்.

அவர் டீ யை வாங்கி "பிள்ளைகள் எழுந்து விட்டார்களா?" என்று கேட்டு, அந்தம்மாவை அடுத்த வேலைக்குத் திருப்புவார். அம்மாவும் பிள்ளைகளுக்கான தேநீரைத் தயார் செய்து, அவர்களிடம் செல்வார். அவர்களை எழுப்பி தேநீர் கொடுத்து, பள்ளி செல்லத் தயார்படுத்த வேண்டும்.

இதற்கிடையில் தேநீர் குடித்த கணவருக்குக் குளிப்பதற்கான தண்ணீரை எடுத்து வைக்க வேண்டும். அம்மா எடுக்கும் வரை அந்த தேநீர் டம்ளர் அங்கே தான் இருக்கும். அதையும் பிள்ளைகள் குடித்த தேநீர் டம்ளர் களையும், அம்மா எடுத்துக் கழுவி வைப்பார்.

இந்த பரபரப்பில் இவர் தனக்காக எடுத்துவைத்த தேநீர், பச்சத் தண்ணியாப் போயிருக்கும். அதன் பிறகு கணவர், குழந்தைகளுக்குக் காலை, மதிய உணவுகளை அவரவருக்குப் பிடித்தமாதிரி தயார் செய்து கொடுக்க வேண்டும். இவ்வளவு பணிகளையும் அம்மா ஒருவரே செய்வார்.

அவரவர் உடைகளை அவரவர் அணிவதைத் தவிர, வேறு எந்த வித வேலைகளும் செய்து அம்மாவின் சுமையை பகிரமாட்டார்கள். குழந்தைகளாகிருந்தால் பெரும்பாலும் அம்மா தான் உடையணிவிக்க வேண்டும். அப்பா அதைக் கூடச் சரியாகச் செய்யமாட்டார்.

இந்தக் கலவரமெல்லாம் முடிந்து சாப்பிடலாம் என்று நினைத்து உட்காருவார். வீட்டுக்கடிகாரம் பன்னிரெண்டு மணி அடிக்கும். மீண்டும் பிள்ளைகள், கணவர் வருகை, அவர் களுக்கான உணவு தயாரித்தல் என்று ஆரம்பித்து விடுவார். இந்த உலகில் அம்மாக்களுக்கு மட்டுமே உருவாக்கப்பட்ட வீடும் அந்த வீட்டில் ஒரு தனியறையும் இருக்கிறதென்றால் அது சமையலறை தான். இது நகரங்களின் வாழும் நடுத்தரவர்க்க அம்மாக்களின் நரகம்.

ஒரு முறை வேலை சம்பந்தமாக ஒரு கிராமத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. நான் எனது இரு சக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு அம்மா பல் விளக்கிக் கொண்டிருந்தார். இதிலென்னாப்பா இருக்கு என்று நீங்கள் நினைக்கலாம். இருக்கு விசயம், என்னவென்றால் அப்போது மணி காலை 11.45. இன்னொரு அம்மாவும் காலை உணவை (கஞ்சி தான்) பாத்திரத்தில் வைத்து குடித்துக் கொண்டிருந்தார். காரணம் புரிந்தது. காலை உணவை பதினோரு மணிக்கு சாப்பிட அவர்களுக்கு என்ன ஆசையா?

அதிகாலை 4 மணிக்கு ஆண் எழுந்து, தூங்கிக் கொண்டிருக்கும் மனைவியை எழுப்பி, வீட்டில் மாடுகள் இருந்தால் அதுகளுக்குத் தண்ணி வைத்துக் கொட்டத்தைக் கூட்டிப்பெருக்கிச் சுத்தம் பண்ணச் சொல்லிவிட்டு, அவர் வெளியே தேநீர் அருந்தச் சென்றுவிடுவார்.

இவர் கொட்டத்தைக் கூட்டி, சுத்தம் செய்துவிட்டு, மாடுகளுக்குக் குடிக்கத் தயார் செய்து வைத்துவிட்டு, கணவர் மற்றும் பிள்ளைகளுக்குக் காலை மற்றும் மதியத்துக்கும் சேர்த்து உணவு தயாரிக்க ஆரம்பித்துவிடுவார் . தேநீர் அருந்தச் சென்ற கணவர் தான் அருந்திவிட்டு, அந்தம்

மாவுக்கும் சேர்த்து தேநீர் வாங்கிவருவார். அந்தவகையில் இவரைப் பாராட்டலாம்.

பின்னர் இருவரும் வயலுக்குச் சென்றுவிடுவார்கள். வயலில் இருவரும் வேலை செய்வார்கள் சிறிது நேரத்தில் அம்மா மட்டும் கிளம்பி வீட்டிற்கு வந்து பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்து பள்ளிக்கு அனுப்பிவைப்பார். பின்னர் இவர் மற்ற வேலைகள் எல்லாம் முடித்து சாப்பிட மணி 11 அல்லது 12 ஆகிவிடும்.

ஆடு, மாடு வயல் இல்லாதவர்களுக்கு இந்தத் தொல்லை இல்லையே என்று நாம் நினைக்கலாம். இல்லைதான். ஆனால் அவர்கள் தினக்கூலியாக தினமும் அதே நேரத்தில் (அதிகாலை 5 மணி)கிளம்பி மீண்டும் வீட்டுக்கு 11 அல்லது 12 மணியளவில் தான் வருகிறார்கள். எந்தச் சுழலில் வாழ்ந்தாலும் பெண்களின் பிறருக்கான உழைப்பின் பங்கு மட்டும் குறைவதே இல்லை.

மேலே குறிப்பிட்ட பெண்கள் அனைவரும் உலக மயமாதல், டிஜிட்டல் மயமாதல் காலத்திற்கு முந்தையவர்கள், மனுதர்மத்தாலும், பார்ப்பனியச் சிந்தனையை உள்வாங்கிய, ஆணாதிக்கச் சிந்தனையுள்ள வர்க்கத்தால் உரிமை மறுக்கப் பட்டவர்கள். ஆனால் நல்ல கல்வி, வேலை, சிந்தனை வளம், சமூகத்தில் நல்ல நிலைமை, கொண்ட இந்த காலத்து கணினிப் பெண்களின் வாழ்க்கையும் ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது.

கல்வியில் கணவருக்குச் சமமாகப் படித்த, ஏன் சில இடங்களில் ஆணை விட அதிகம் படித்த பெண்கள் வாழும் வீடுகளில், இருவருமே பணிக்குச் செல்பவராக இருந்தாலும், அந்த வீட்டில் அனைத்து வேலைகளையும் பெண்களே செய்ய வேண்டிய சூழலில் இருக்கிறார்கள். இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்தாலும் சமையல் மட்டுமல்ல வீட்டில் மற்ற எந்த வேலைகளும், ஆண்களால் பகிரப் படுவதில்லை.

சமகல்வி, சம பொருளாதாரமிருந்தும் வேலைகள் மட்டும் பெண்களுக்கு இரட்டிப்பாக இருக்கிறது. விதிவிலக்காக ஒரு சில குடும்பங்களில் மட்டும் ஆண்கள், பெண்களின் ஒரு சில வேலைகளைப் பகிர்ந்து கொள் கிறார்கள். அதற்குக் காரணம் பெண்கள் சுயமரியாதை உள்ளவர்களாகவும், சுயமதிப்பை அறிந்தவர்களாகவும், பொருளாதாரத்தில் சுயசார்புள்ளவர்களாகவும் இருப்பதால் தான்.

பெரும்பாலான பெண்கள், ஆணாதிக்கச் சிந்தனை யுள்ள அரக்கர்களிடம் மாட்டிக் கொண்டு, வீட்டு வேலை, அலுவலக வேலை, குழந்தைகள் பராமரிப்பு என்று பல சுமைகளைச் சுமந்து, தனக்கான விருப்பத்தை வெளியில் சொல்ல முடியாமல் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள்.

குடும்பம் என்ற அமைப்பு பெண்களால் கெடக்கூடாது என்று பெண்களால் பெண்களுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இந்தக் கொடுமையின் சூத்திரதாரிகள் ஆண்கள் தான். அவர்கள் தான் நம் கையைக் கொண்டே நம் கண்ணைக் குத்துகிறார்கள்.

சமீபமாகத்தான் சில பெண்கள் எடுக்கின்ற விவகாரத்து, தனித்து வாழ்தல் போன்ற முடிவுகள், ஆண்களை, பெண்களின் பேச்சுக்களைக் காது கொடுத்துக் கேட்கவைக்கின்றது. வீட்டில் வேலையை செய்யச் சொன்னால் பத்தில் ஒன்றாவது செய்கிறார்கள். மார்க்கெட் போய் காய்கறி வாங்குதல், கடைக்குப் போவது போன்ற வேலைகளைச் செய்ய ஆரம்பித்துள்ளார்கள். மேலும் அவர்களை சமையலறையை நோக்கித் தள்ளவேண்டும். காலமெல்லாம் பெண்ணினம் பட்டத்துயரம் என்னவென்று புரியவைக்கவேண்டும்.

OECD( Organization for Economic Co-operation and Development) 2014 ம் ஆண்டு எடுத்த புள்ளிவிபரப்படி உலகளவில் வீட்டுவேலைகளில் பங்கெடுக்கும் ஆண்கள் வரிசையில் கடைசியாக இருப்பது இந்திய ஆண்கள் தான். இவர்கள் வீட்டு வேலைகளில் ஒரு நாளைக்கு வெறும் பத்தொம்பது நிமிடங்கள் வீதம், வாரம் 5மணி நேரம் முப்பத்தைந்து நிமிடம் மட்டும் செல்விடுகிறார்கள். இது பெண்களுடன் ஒப்பிடுகையில் ஒரு சதவீதத்திற்கும் கீழ்தான்.

மேலும் இந்தியப் பெண்கள்தான் சமையல் வேலையில் ஒரு நாளைக்கு 5 மணி நேரம் வேலை செய்யும் நிலையில் இருக்கிறார்கள். உலக ஒப்பீட்டளவில் இந்தியப் பெண்கள் வீட்டு வேலை செய்யும் நேரம் மற்ற நாட்டைக் காட்டிலும் 6 மடங்கு அதிகம். வேலைக்குப் போகாத இந்திய ஆண்கள் சொந்த நலனுக்காக செலவிடும் நிமிடங்கள் ஒரு நாளைக்கு 703 நிமிடங்கள், அதாவது ஒரு நாளில் பதினொரு மணி நேரம். இந்த நேரத்தை அவர்கள், தொலைக்காட்சி பார்ப்பது, அரட்டை அடிப்பது, வாக்கிங் போவது, செய்தித் தாள் படிப்பது, டீக்கடைக்குப் போவது, மாதிரியான வேலை களுக்குத்தான் செலவிடுகின்றனர் ஒழிய வீட்டு வேலைகளில் பங்கேற்பதில்லை.

ஒரு பெண் அதிகாரியாக இருந்தாலும், அவர் கீழ் பல பேர் அவருக்கு பணிவிடை செய்தாலும். அவர் வீட்டு வேலையை அந்தப் பெண் அதிகாரி மட்டுமே செய்ய வேண்டும். இத்தனைக்கும் அவர் கணவர் எந்த வேலைக்கும் போகாமல் வீட்டிலேயே இருந்தாலும், அந்தப் பெண் தான் எல்லா வேலைகளும் செய்ய வேண்டும்.

திருமணத்திற்குப் பெண்ணின் சம்மதம் கேட் கிறார்களோ இல்லையோ, முதலில் நன்றாக சமைக்கத் தெரியுமா என்றுதான் கேட்கிறார்கள். சமையல் வேலை மட்டுமே தெரிந்த ஆண் கூட வீட்டில் சமைப்பதில்லை. கேட்டால் நாளெல்லாம் வேலை செய்கிறேன் அதனால் நீயே செய் என்பார். இதே பதிலை ஒரு பெண் சொன்னால் ஏற்பார்களா? என்பது சந்தேகம் தான். ஒரு வேளை சரி என்றாலும் ஆண்கள் சமைக்க மாட்டார்கள். கடைகளில் தான் வாங்கி வருவார்கள்.

வீட்டு வேலைகளில் நாம் விடுபட, அல்லது ஆண்களையும் பங்கேற்க வைக்க, முதலில் நாம் அவர் களுக்கு ஜனநாயக முறையில் எடுத்துச் சொல்வோம். அடுத்து, டிக்டேட் செய்வோம். அப்படியும் ஒத்துவர வில்லையென்றால் ஒரிரு நாள் வீட்டுவேலையைப் புறக்கணிப்போம். இது ஆரம்பம் தான்.

முதலில் வீட்டு வேலையை நமது பெண் பிள்ளைகளுக்கு மட்டும் சொல்லித்தராமல் ஆண் பிள்ளைகளுக்கும் சொல்லித்தந்து பழக்குவோம். இறுதியாக, சமையலறை ஒன்றும் கருவறையல்ல பெண்கள் மட்டுமே வைத்திருக்க, கருவறையே தேவைப்பட்டால் எடுப்போம். சமையலறைகள் எம்மாத்திரம்?

#Boycott Kitchen# 24.12.17

சி.இராவணன்

# நூல் அறிமுகம்

'குஜராத் கோப்புகள்: மறைக்கப்பட்ட கோரவடிவங்கள்' என்ற பெயரில், பிரபல இதழியலாளர் ராணாஅயூப் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலை, பாரதி புத்தகாலயத்தினர் தமிழில் வெளியிட்டுள்ளனர். ச.வீரமணி அவர்கள் தமிழில் மொழி பெயர்ப்பு செய்துள்ளார். நல்ல அட்டை வடிவமைப்புடன் நேர்த்தியாக வந்துள்ளது. பின் அட்டைப் படம் இன்றைய இந்திய அரசியல் எப்படி உள்ளது என்பதை விளக்குவதாக உள்ளது.

**நூலாசிரியர் பற்றி**

தெஹல்கா பத்திரிக்கையின் முன்னாள் ஆசிரியரான இவர், 2010 ம் ஆண்டில் தன் உயிரையும் பணயம் வைத்து இந்த ஆதாரங்களைத் திரட்டி உள்ளார். 2001 ம் ஆண்டுமுதல் 2010ம் ஆண்டு வரை குஜராத் மாநிலத்தில் பணிபுரிந்த காவல்துறை மற்றும் உள்துறை உயர் அதிகாரிகளைப் பேட்டி கண்டு 2002 ல் நடந்த குஜராத் படுகொலைகள் மற்றும் போலி என்கவுண்டர்கள் குறித்து அவர்கள் மனம் திறந்து பேசியதை ரகசியமாகப் பதிவு செய்தார்.

தன்னை அமெரிக்காவில் வாழும் இந்தியாவைச் சேர்ந்த ஒரு திரைப்பட இயக்குநர் எனக் கூறி தன் பெயரையும், தனது அடையாளத்தையும் மாற்றிக் கொண்டு, குஜராத்தின் முக்கியப் பிரமுகர்களைப் பேட்டி எடுத்து அதனைத் தனது 'தெஹல்கா' நிறுவனத்திடம் அளித்தார். அவர்கள் வெளியிட மறுத்துவிட்டனர். இதனை வெளியிட்டால் நாம் கொல்லப்படுவோம் என தெஹல்காவினர் தெரிவித்து விட்டனர்.


எனவே அவற்றையெல்லாம் தொகுத்து ஆங்கிலத்தில் 'குஜராத் ஃபைல்ஸ்' என வெளியிட்டார். இவரது புலனாய்வுக் கட்டுரைகளால் குஜராத்தின் அன்றைய உள்துறை அமைச்சரும் மோடியின் தளபதியுமான அமித்ஷா மற்றும் குஜராத் மாநிலத்தின் முக்கிய காவல்துறை அதிகாரிகள் அனைவரும் சிறை சென்றனர்.

இதழியல் துறையில் பணி செய்ய விரும்பும் இளம் பத்திரிக்கையாளர்களுக்கு இந்தப் புத்தகம் ஒரு கையேடாக அமையும். தான் எடுத்துக் கொண்ட பணிக்காக தன்னை எப்படியெல்லாம் ரானா அயூப் அவர்கள் மாற்றிக் கொண்டு பல்வேறு அச்சுறுத்தல்களுக்கிடையே பணி செய்துள்ளார் என்பதும், தான் சார்ந்த சமூக மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்ற எதிரிகளிடம் பேசும் போது கூட, உணர்ச்சி வசப்படாமல் செய்தி சேகரித்துள்ளார் என்பதும் முற்போக்காளர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஆகும்.

இந்துமதம் கட்டமைத்துள்ள பெண் அடிமைத்தனத்திற்குச் சிறிதும் குறைவில்லாமல் பெண்களை பர்தா என்னும் விலங்கு பூட்டும் இஸ்லாமிய சமூகத்திலிருந்து மிகப் பெரும் இதழியலாளராக உருவாகியுள்ள ரானாஅயூப் அவர்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். தமிழகத்தில் ஏ.சி அறையில் அமர்ந்து பொய்யை எழுதும் மோசமான பத்திரிக்கைகளுக்கு ஒரு பாடமாகும்.

**போலி என்கவுண்டர்கள்**

என்கவுண்டர்கள் பெரும்பாலும் 99 சதவீதம் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, இஸ்லாமிய மக்கள் மீதும் நக்ஸலைட் என்று கூறி கம்யூனிஸ்ட்கள் அவர்களுக்கு ஆதரவான பழங்குடியின மக்கள் மீதும்தான் நடத்தப் பட்டுள்ளது.



எங்காவது ஒரு இந்து மத வெறி இயக்கத்தைச் சார்ந்தவன் யாராவது என்கவுண்டர் செய்யப் பட்டுள்ளனரா? அல்லது அவர்கள் தவறே செய்யாத உத்தமர்களா? அப்பாவியான மக்களைக் கொன்ற எந்த மதவெறியனோ, பெருமுதலாளியோ எங்கேயாவது தண்டனைக்குள்ளாகி உள்ளனரா?

இந்தியா முழுமைக்குமே என்கவுண்டர் என்பது அரசியல் பழிவாங்கலுக்காகவே நடைப் பெற்றுள்ளது. அதுபோலவே தான் குஜராத்திலும் நடந்துள்ளது. சொராபுதீன் என் கவுண்டர் மற்றும் இஸ்ரத் ஜஹான் என்கவுண்டர் என பல என்கவுண்டர்கள் அரசியல் பழிவாங்கல், சமூதாய இயக்கங்களை மடைமாற்றம் செய்தல், மக்கள் கவணத்தை திசை திருப்புதல் ஆகியவற்றிற் குத்தான் பயன்பட்டுள்ளது.

**“ ஆர்.எஸ்.எஸ் ஒரு கொலைகார அமைப்பு என்பதை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியும் இந்தியாவின் பிரதமர் ஒரு கொலைகாரர் என்பதையும் தெளிவாக விளக்கியும் வந்துள்ள ‘குஜராத் கோப்புகள்’....**

இந்த நூலின் 14 ம் பக்கத்தில் “அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த, அமித்ஷா விற்கும், உயர் அதிகாரிகளுக்கும் இடையே என்கவுண்டர்கள் நடைபெற்ற சமயங்களில் நடந்த தொலைபேசி உரையாடல்களின் பதிவுகளாகும்.” மேலும்

“என்கவுண்டர் என்ற பெயரில் அப்பாவி களைக் கொன்று அவர்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்த வேண்டும் என்கிற கபடத் தனமான சதித்திட்டம்” என்று குறிப்பிட்டிருந்தது மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையால் (சிஐடி) தரப்பட்ட அறிக்கை.

சொராபுதீன் ஒரு சிறிய ரவுடி. அவர் குஜராத்தின் மிகவும் முக்கியமான காவல்துறையைச் சார்ந்த ஐபிஎஸ் அதிகாரியான அபய் சூடாசாமா என்பவருக்கு நெருக்கமானவர் என்று சொல்லப் படுகிறது. அபய்சூடாசாமா(ஹவாலா பணம் புளங்க கூடியவர்) என்ற அதிகாரி அமித்ஷாவிற்கு நெருக்கமானவர் என்ற பேச்சும் உண்டு. சொராபுதீன் போன்ற ரவுடிகளைத் தங்கள் அரசியல் சுய நலத்திற்கு பயன்படுத்திவிட்டு இரகசியம் வெளியே தெரியாமல் இருக்க இவர்களுக்கு லஷ்கர் இ தொய்பா என பெயரிட்டு கொலை செய்வது தான் இந்தியா முழுக்க அதிகார வர்க்கத்தின் செயலாகும்.

இந்த நூலின் 63 ம் பக்கத்தில் குஜராத் மாநிலத்தின் காவல்துறை கூடுதல் துணைத்தலைவர் ராஜன் பிரியதர்சி அவர்களின் நேர்காணலில் இருந்து “ஒட்டு மொத்த நாடும் அந்த என்கவுண்டர் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறது. அமைச்சரின் கட்டளைக்கிணங்க சொராபுதீனையும் துளசி பிரஜாபதியையும் அவர்கள் தீர்த்துக் கட்டினார்கள். இந்த அமைச்சர் அமித்ஷா இருக்கிறாரே, அவர் எப்பொழுதும் மனித உரிமையில் நம்பிக்கை இல்லாதவர். இந்த மனித உரிமை ஆணையங்கள் மீது எனக்கு எப்போதுமே நம்பிக்கை கிடையாது என்று அவர் எங்களிடம் சொல்வது வழக்கம்”

ஒரு மாநிலத்தின் உள்துறை அமைச்சரே என்கவுண்டர் செய்ய சொல்வதும் எனக்கு மனித உரிமை ஆணையங்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதும் ஜனநாயகத்தின் மீது பற்றுள்ள அனை வருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் ஆகும். இவர்கள் கையில்தான் இந்தியா சிக்கியுள்ளது.

மேலும் குஜராத்தின் உள்துறைச் செயளாலர் அசோக் நாராயணன், உளவுத் துறைத் தலைவர் ஜி.சி.ரெய்கர் ஆகியோரும் தங்களுடைய நேர்கானலில் சொராபுதீன், இஸ்ரத் ஜஹான் என்கவுண்டர் வழக்குகளில் அரசியல்காரணம் உள்ளது என்றும் அவர்கள் அப்பாவிகள் என்றும் பதிவு செய்கின்றனர். எனவே என்கவுண்டர்கள் மட்டுமல்லாமல் இங்கே தூக்குத் தண்டனைகளும் ஜாதி, மதம் பார்த்து வழங்கப்படுகிறது.

குஜராத் படுகொலைகள்

உலகத்தின் முன்பு வெட்கி தலைகுனியும் நிலையை இந்தியாவிற்கு ஏற்படுத்திய பல சம்பவங்களில் குஜராத்தில் நடந்த படுகொலைகளும் ஆகும். அதைப் பல அமைச்சர்களும், அரசு அதிகாரி களும் முன்னின்று நடத்தியதற்கான ஆதாரங்களை அவர்களிடமிருந்தே பெற்று, பதிவு செய்யப் பட்டுள்ளது.

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைக் காரணம் காட்டி மூன்று மாதங்களாக தொடர்ந்து வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, அதை இந்துக் களின் எழுச்சி என்று கொண்டாடிய மனித ரத்தம் குடிக்கும் மிருகங்கள்தான் இந்த காவிபயங்கர வாதிகள். ஆனால் கோத்ரா சம்பவமே காவல் துறை அதிகாரிகளால் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. 2002-ல் நடைபெற்ற கலவரத்தில் மோடியின் அமைச்சரவையில் குழந்தைகள் நலம் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் மாயா கோட்னானி யின் மருத்துவமனைக்கு அருகில் நரோடா பாட்டியா படுகொலைகள் நடைபெற்றன.

குஜராத்தின் உள்துறைச் செயலாளர் அசோக் நாராயணன் தனது பேட்டியில் “ பல சமயங்களில் அமைச்சர்கள் வீதிகளில் நின்றுகொண்டு, கூட்டத்தினருக்கு கட்டளை பிறப்பித்துக் கொண் டிருந்தார்கள். நான் முதல்வர் (மோடி) அறையில் உட்கார்ந்திருந்தபோது அது போன்ற ஒரு நிகழ்வு நடந்தது” (பக்கம் 89,90)

மோடியின் அமைச்சரவையின் உள்துறைச் செயலாளரின் கூற்றே இப்படி இருக்கிறது. கலவரத் திற்கான முதல் குற்றவாளியாக மோடி கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது மிகவும் யோக்கியமானவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் சங் பரிவார் மோடியை கட்சியிலிருந்து நீக்கியிருக்க வேண்டும். ஏன் செய்யவில்லை? ஏனெனில் செய்யச் சொன்னதே ஆர். எஸ்.எஸ் தான்.

*பட்டேல் சமூகத்தின் இடஒதுக்கிட்டிற்காகப் போராடிய ஹர்த்திக் பட்டேல் தனது கையில் இருந்த வாளை உருவி, செய்தியாளர்களைப் பார்த்து, "நான் வெட்டிய கைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று உங்களுக்கு தெரியுமா"? என்று கேட்கிறார் மேலும் அமைச்சர்கள், காவல்துறை அதிகாரிகள், ஆர்.எஸ்.எஸ் மற்றும் வி.எச்.பி தவைர்கள் பேசிய பேச்சின் ஆதாரம் வெளியடப்பட்டது. கொத்துக் கொத்தாக ஒரு சமூகத்தையே கொலை செய்த அயோக்கியர்களின் கையில்தான் இன்று இந்தியாவே சிக்கியுள்ளது.*

**நேற்று குஜராத் – நாளை இந்தியா**

*குஜராத்தை இந்துத்துவத்தின் சோதனைச் சாவடியாக பார்த்த ஆர்.எஸ்.எஸ் பிடியில்தான் இன்று இந்தியா சிக்கியுள்ளது. பெரியார், அம்பேத்கர் தொண்டர்கள், மார்க்சியவாதிகள் முன்பு மிகப் பெரிய சவால் எழுந்துள்ளது. தனது சொந்த கட்சியைச் சேர்ந்த மாநில உள்துறை அமைச்சராக இருந்த ஹரேன் பாண்ட்யா கொலை பற்றியும் சந்தேகம் எழுப்பியுள்ளார் அவரின் மனைவி ஜக்ருதிப்பென். தனக்குப் பிடிக்காதவர் களைக் கொலை செய்துவிட்டுப் பழியை முஸ்லீம்கள் மீது போடுவது என்பதும் தனது அமைப்பைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட மக்களைக் கலவரத்தில் ஈடுபடுத்தி அதில் அரசியல் ஆதாயம் தேடுவதும் இந்த இந்துப் பாசிசக் கும்பலின் பாணி. இந்தப் பாசிசக் கும்பலிடம் இருந்து மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு நமக்கு உள்ளது.*

*எத்தனை என்கவுண்டர்கள்? எத்தனை ஆயிரம் படுகொலைகள்? அனைத்தும் இந்து மத நம்பிக் கையை வைத்து, அதன் புராணக் கதைகளை வைத்து, சாதாரண மக்களை ஆயுதபாணிகளாக மாற்று கிறார்கள். இவர்களை எந்த இந்து நம்பிக்கையை மக்களிடம் சொல்லி திரட்டுகிறார்களோ அந்த நம்பிக்கைகளை விமர்சனம் செய்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை தாங்கள் இந்துக்கள் அல்ல என்று முழங்க வைப்பதில்தான் நமது வெற்றி அடங்கியுள்ளது. இல்லை இது நாளை இந்தியா முழுவதும் நடக்கும்*

*ஆர்.எஸ்.எஸ் ஒரு கொலைகார அமைப்பு என்பதை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியும் இந்தியாவின் பிரதமர் ஒரு கொலைகாரர் என்பதையும் தெளிவாக விளக்கியும் வந்துள்ள 'குஜராத் கோப்புகள்' நூலை முற்போக்குவாதிகள் தங்களுக்கான அறிவாயுதமாகப் பயன்படுத்த வேண்டும்.*

*கிடைக்குமிடம் - பாரதி புத்தகாலயம், 7, இளங்கோ சாலை,தேனாம்பேட்டை, சென்னை - 600018 விலை170 பேச-044 - 24332424*

**சிவசங்கரி**
அண்ணா பல்கலைக்கழகம்

## தொலைத்த இதயங்கள்

என் வாழ்வின் வசந்தகால
நினைவுகளால் தீட்டப்பட்ட
உயிரோவியம் நீ
உன் பிரிவு
இன்பமான வலியை தருகிறது
சில கண்ணீர்த்துளிகளோடு சேர்த்து ..
என் கனவுகள் தொலைந்தாலும்
என் காதல் கரையவில்லை இதுவரை .
உன் நினைவுகள் என்னை தொடர
நிஜங்கள் மறந்து நித்திரையில் ஆழ்கிறேன் நான் .
உன்னுடனான என் நாட்கள்,
மகிழ்ச்சியை மட்டும் சுமந்த
ஞானப்புத்தகங்கள்.
திருப்பும் பக்கமெல்லாம்
இளந்தென்றல் போன்ற
மகிழ்வான தருணங்கள்.
எனக்குள் நீயும் ,உனக்குள் நானும்
தொலைத்த நம் இதயங்கள்
எங்கோ, தொலைந்து போனது தற்போது ..
அதை தேடிதேடியே,
தொலைந்து போனேன் நான் .
கரைந்து போனேன் நான்

## நினைவுகள்.....

நிஜத்தில் நின்று திரும்பி பார்க்கிறேன்
கடந்த என் காலம்
திரும்புமா என்று.....
நிழலாய் தொடர்கிறது
உன் நினைவுகள் என்னை...
என் கனவுகள் கானலாய் மாற,
உன் நினைவுகள் மட்டுமே
நிம்மதி தருகிறது எனக்கு....
பசுமரத்தாணியாய் பதிந்த உன் நினைவுகள்
வெளிச்சமாய் தொடர்கிறது
என் பாதையை....
என் கனவுகள் துறந்து
உன் நினைவுகளோடு
காத்திருக்கிறேன்
உனக்காக........

## கனவில் நீ....

நீ என்னுடன் இல்லாத தருணத்தில்
என்னை
உறங்க சொல்கிறது
என் மனம்
காரணம்,
கனவில் நீ வருவாய் என்பதால்.....

## தோழர் ஜெயராணியின் ‘மஞ்சள் எதிர்ப்புப் பாடல்’




கொழம்புல மஞ்சள்
கோயில்ல மஞ்சள்
மூஞ்சியில மஞ்சள்
தாலியில மஞ்சள்
மாலையில மஞ்சள்
சேலையில மஞ்சள்
புதுசுலயும் மஞ்சள்
ஆரத்தியில மஞ்சள்
அம்மா போட்ட மஞ்சள்
கும்பத்துலயும் மஞ்சள்
தங்கத்துல மஞ்சள்
வாசல்ல மஞ்சள்
பூஜையில மஞ்சள்
கொளத்துல மஞ்சள்
கொள்கையில மஞ்சள்

நல்லதுக்கு மஞ்சள் வேணும்
நாளுக்கெல்லாம் மஞ்சள் வேணும்
வெட்டுப்பட்டா மஞ்சள் வேணும்
நோயிக்கெல்லாம் மஞ்சள் வேணும்

ஷிட்...ஷிட்...ஷிட்...
போடாத நீ... தூத்தேறியே....

சாலையோரம் மஞ்சள்
சாக்கடையில் மஞ்சள்
கழிப்பறையில் மஞ்சள்
மலக்குழியில் மஞ்சள்
கைகளியே மஞ்சள்
கண்ணீரில் மஞ்சள்
வலியின் நிறம் மஞ்சள்
இழிவின் நிறம் மஞ்சள்

அந்த மஞ்சள் உனக்கு
இந்த மஞ்சள் எனக்கா?
நல்ல மஞ்சள் உனக்கு
நாத்த மஞ்சள் எனக்கா?

உன்னோட மஞ்சள் உனக்கே உனக்கு
உன்னோட மலமும் உனக்கே உனக்கு

ராக்கெட் விடுற, சாட்டிலைட் விடுற
மலமள்ள மட்டும் மனுசன விடுற
மேக் இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா
நிறுத்து... நிறுத்து... உன் வேசத்த நிறுத்து
ஏ டி எம் இப்போ பேடிஎம் ஆச்சு
ப்ளாஸ்டிக் பணமும் கேஷ்லெஸ் ஆச்சு
ஆதார் இந்தியா, அல்ட்ரா இந்தியா
உன் அறிவியல் அறிவு எங்க போச்சு?
ஷிட்...ஷிட்...ஷிட்...
போடாத நீ... தூத்தேறியே....

# மஞ்சள் இழிவின் நிறம்

‘மஞ்சள்’ மங்களகரமானது என்ற இந்துப் பொதுப் புத்தியின் செவிட்டில் அறைந்துள்ளது ‘மஞ்சள்’ நாடகம். வலியின் நிறமே மஞ்சள். இழிவின் நிறமே மஞ்சள் என்று மனிதர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் அழுக்குப்படிந்த மூளைகளைத் தட்டி எழுப்பிப் பதிய வைத்துள்ளது இந்த நாடகம்.

நாம் இந்த நாடகத்தைப் பார்க்கவில்லை. நாடகம் நடந்த ஊருக்கும் நமக்கும் வெகுதூரம். ஆனால், இந்த நாடகத்தைப் பார்க்காத நம்மைப் போன்ற இலட்சக் கணக்கானவர்களுக்கும் ஒரு தாக்கத்தை உண்டாக்கியது இந்நாடக நிகழ்வு.

நாடகம் குறித்த Promo Video’s களின் பயன் மிகப் பெரியது. தமிழ்நாட்டில் இதுபோல, இதுவரை தமிழர் உரிமைகள், தமிழ்ஈழம், சுற்றுச்சூழல், இயற்கை விவசாயம் தொடர்பான நிகழ்வுகளுக்குரிய Promo Video’s களைப் பார்த்திருப்போம். ஊடகங்களும், பெரும் வணிக நிறுவனங்களும் அதற்காக விளம்பரத் தூதர் களாகப் பணியாற்றியதையும் பார்த்திருப்போம்.

முதன்முறையாக தமிழ் நாட்டின் அடித்தட்டு மக்களின் மிகப்பெரும் துயரத்தையும், நீங்காத இழிவையும் வெகுமக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் கடமையில் - பெரும் ஊடகங்களையும், நவீன பரப்புரை உத்திகளையும் பயன்படுத்தியுள்ளார் தோழர் ஜெயராணி. அவருக்குத் துணையாக தோழர் சரவணன், பாரதி ஆகியோரும் கடமையாற்றியுள்ளனர்.

இயக்குநர் இரஞ்சித் அவர்கள் மெட்ராஸ், கபாலி படங்கள் மூலமாக மிகப் பெரும் ஜாதி ஒழிப்புப் புரட்சி நடத்திவிட்டார் என்று சமூக வலைத்தளங்களில் பரபரப்புகள் காணப்பட்ட நேரத்தில் நாம், சாதி ஒழிப்புக்கோ, தீண்டாமை ஒழிப்புக்கோ அவை துளியும் பயன்தராது என்றோம். இப்போதும் நமக்கு அதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை.

ஆனால், தோழர் இரஞ்சித் நம்மை ஏமாற்ற வில்லை. மிகப்பெரும் உச்சத்தில் இருக்கும் இதே நேரத்தில், ஜாதி ஒழிப்புக்காகக் களத்தில் நிற்கும் தோழர் இரஞ்சித் அவர்களின் பணியைப் பாராட்டுகிறோம்.

நாடகத்தை ஊர் ஊராகக் கொண்டு செல்வதற்கு நீண்ட காலம் ஆகிவிடும். சிறு சிறு வீடியோக்களாக மாற்றி வெளியிட்டால் இன்னும் கூடுதல் பலன் இருக்கும்.

காலங்காலமாக திராவிடர் இயக்கங்களின் பரப்புரைப் பயணங்களில் பேசி வந்த செய்திகளை இன்று, வெகுமக்களின் பெரு ஊடகங்களில் இடம்பெற வைத்து - ஒரு கருத்துருவாக்கத்தைச் செய்துள்ள, தோழர்கள் இதழியலாளர் ஜெயராணி, இயக்குநர் இரஞ்சித், வழக்கறிஞர் சரவணன், பாரதி இன்னும் முகக்காட்டாத ஜெய்பீம் மன்றம், நீலம் அமைப்புகளின் தோழர்கள் அனைவருக்கும் கருப்புச்சட்டைகளின் சார்பில் நன்றி.

# தாலி அகற்றிய லிவிங் டுகெதர் இணையர்

## தோழர் சுமதி–கருப்பசாமி

என்னுடைய பெயர் சுமதி, நான் பிறந்த ஊர் பொள்ளாச்சி அருகில் விளாமரத்துப்பட்டி எனும் கிராமம். எனக்கு இரண்டு தங்கைகள். எனக்கு முதல் திருமணம் 1999ல் நடந்தது. பெற்றோர்கள் பார்த்து நடத்தி வைத்த திருமணம். எனக்கு அந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை. அப்போது எனக்கு 17 வயது.

பெற்றோர்களுக்காக திருமண வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தேன். எங்களுக்குள் கருத்து வேறுபாடு காரணமாக ஆறு மாதம் எங்களுடைய வீட்டிலும், ஆறு மாதம் அவர்களின் வீட்டிலும் இருப்பேன். இப்படி இரண்டு வருடம் கடந்து விட்டது. ஒரு கட்டத்தில் இருவருக்கும் வாக்குவாதம் அதிகம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் கட்டிய தாலியை கழற்றி கொடுத்தவிட்டு என்னுடைய அம்மா வீட்டிற்கே வந்து விட்டேன்.

**தோழர் கருப்பசாமியின் அறிமுகம் எப்போது கிடைத்தது?**

கருப்பசாமியின் உறவினர் என்னுடைய ஊரில் இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிற்கு கருப்பசாமி அடிக்கடி வருவார். அப்போதுதான் அவருடைய அறிமுகம் எனக்கு கிடைத்தது. நாங்கள் இருவரும் பேசிப் பழகினோம். அவரை நானும், என்னை அவரும் புரிந்து கொண்ட பின்பு நாங்கள் இருவரும் சேர்ந்து வாழலாம் என்று முடிவு எடுத்தோம்.

**உங்கள் திருமணம் எங்கு, எப்படி நடந்தது?**

எங்களுடைய திருமணம் நல்ல நாள் பார்த்து எந்த கோவிலிலும் நடக்கவில்லை. நாங்கள் தாலியும் கட்டவில்லை. இருவரும் சேர்ந்து வாழலாம் என்று முடிவு செய்து வீட்டை விட்டு வெளியேறினேன். நாங்கள் இருவரும் வாடகைக்கு வீடு பார்த்து எங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கினோம். இந்த சமுதாயம் தாலி இல்லாமல் இருந்தால் என்னைக் கேவலமாக நினைக்கும் என்று கடையில் மஞ்சள் கயிற்றை வாங்கி அதை நானே கட்டிக் கொண்டேன். இப்படித்தான் நடைபெற்றது.

**தாலியை நீங்களே கட்டிக் கொண்டேன் என சொல்கிறிர்களே, தாலி கட்ட வேண்டும் என்று உங்கள் கணவரிடம் நீங்கள் கேட்டீர்களா?**

நான் கேட்டேன். அதற்கு அவர், அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒருவொருக் கொருவர் புரிந்து கொண்டு சேர்ந்து வாழ்வோம். ஒரு தாலி மட்டுமே நம்முடைய வாழ்வியலை மாற்ற முடியாது. ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையும் இருந்தாலே போதும் என்று சொல்லிவிட்டார். ஆனால் நான் தான் இந்த சமுதாயத்தில் தாலி இல்லாமல் இருக்கக் கூடாது என்று நானே தாலியை வாங்கிக் கட்டிக் கொண்டேன்.

**மாங்கல்ய பூஜை பற்றியும், தாலி கட்டிய கணவனே கண் கண்ட தெய்வம் என்று சொல்வது பற்றியும் உங்களுடைய கருத்து என்ன?**

மாங்கல்ய பூஜை என்பது தேவையில்லாத ஒன்று. மாங்கல்ய பூஜை செய்வதால் கணவருக்கு ஆயுட்காலம் அதிகரிக்கும் என்கிற மூடத்தனம் உண்டு. அதைப் பின்பற்றி மக்கள் பூஜைகள் செய்வது வீண் பொருட்செலவையும், நேரச் செலவையும் ஏற்படுத்துகிறது. வசதியாக இருப்பவர்கள் சுமங்கலி களை அழைத்து ஏழு பேர் அல்லது ஐந்து பேருக்கு வீட்டில் விருந்து ஏற்பாடு செய்வார்கள். மாங்கல்ய பூஜை முடிந்தவுடன் அவர்கள் வீட்டிற்கு செல்லும் போது ஒரு தட்டில் பூ, பழம், புடவை, மஞ்சள் கயிறு, குங்குமம், வளையல் ஆகிய பொருட்களையும் கொடுத்து ஆசிர்வாதம் வாங்குவார்கள். ஒரு சிலர் புடவைக்கு பதிலாக ஜாக்கெட் துணி கொடுப் பார்கள். ஆனால் கிறாமப்புற அடித்தட்டு மக்கள் இதைப் பின்பற்றுவதில்லை.



இதில் என்னுடைய கருத்து என்னவென்றால் மாங்கல்ய பூஜையே கணவன் நூறு ஆண்டுகள் வாழ வேண்டும். கணவன் வாழ்ந்தால்தான் நாம் பூ, பொட்டு எல்லாம் வைத்து சுமங்கலியாக வாழ முடியும் என்றுதான் அந்த பூஜையை நடத்து கிறார்கள். ஆனால் எத்தனை ஆண்கள் தன்னுடைய மனைவி நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்று நினைத்து பூஜை செய்கிறார்கள். (அதாவது பெண்கள் சுமங்கலி பூஜை செய்வது போல்) சுமங்கலி பூஜை செய்வதே பெண்கள் தன்னைத்தானே அடிமை என்று கூறிக்கொள்ளும் ஒரு விழாவாகத் தான் பார்க்கிறேன்.

**இந்து மதத்தில் தாலி கட்டாத பெண்கள் ஒழுக்கம் இல்லாதவர்கள் என்கிறார்களே, அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?**

தாலி கட்டிய பெண்கள் எல்லாம் ஒழுக்க முடைய பெண்கள், தாலி கட்டாத பெண்கள் எல்லாம் ஒழுக்கம் இல்லாத பெண்கள் என்பது தவறான கருத்து. அது அவர்களுடைய வாழ் வியலையும் மனநிலையையும் பொறுத்தது. இதில் தாலி என்கின்ற ஒரு அடிமைச்சின்னத்தை அடையாளப்படுத்தி பெண்களை நாம் ஒழுக்கம் இல்லாதவர்கள் என விமர்சிக்கக்கூடாது.

**தோழர் கருப்பசாமியிடம்...**

என்னுடைய பெயர் கருப்பசாமி. துணைவியார் பெயர் சுமதி. நாங்கள் பல்லடம் செம்மி பாளையத்தில் வசிக்கிறோம். எங்களுக்கு இரண்டு குழந்தைகள். மகன் கோகுல், மகள் வைஷ்ணவி. பெரியார் கொள்கையின் மீது ஈடுபாடு கொண்டதால் எங்களுடைய மகளுக்கு வைஷ்ணவி என்ற பெயரை கருந்திணை என்று மாற்றிவிட்டோம்.

**உங்களுடைய திருமணத்தை பற்றி சொல்லுங்கள்?**

எங்களுடைய திருமணம் 2001 ல் நடந்தது. எனக்கு இது முதல் திருமணம். என்னுடைய துணைவியாருக்கு இது இரண்டாவது திருமணம். என்னுடைய வீட்டில் யாருடைய சம்மதமும் கேட்காமல் நான் திருமணம் செய்து கொண்டேன். இதனால் என்னை வீட்டில் யாரும் ஏற்றுக் கொள்ள வில்லை. சுமதியின் வீட்டிலும் ஏற்றுக் கொள்ள வில்லை.

இதனால் நாங்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியேறி வாடகைக்கு வீடு எடுத்து தங்கினோம். நாங்கள் தாலி கட்டித் திருமணம் செய்யவில்லை. ஒருவருக்கொருவர் புரிந்து எங்களுடைய வாழ்க் கையை எந்த ஒரு சடங்கு, சம்பிரதாயம் இல்லாமல் தொடங்கினோம்.

இந்த சமூகத்தில் தாலி இல்லாமல் சேர்ந்து வாழ்ந்தால் சமூக மக்கள் நம்மைத் தப்பாகப் பேசுவார்கள் என்று சுமதியே கடையில் மஞ்சள் கயிறு ஒன்றை வாங்கி கட்டிக்கொண்டார்கள். ஊரில் இருப்பவர்களுக்கு அது நான் கட்டிய தாலி. ஆனால் உண்மையில் நாங்கள் இத்தனை ஆண்டுகளும் தாலி கட்டாமல்தான் சேர்ந்து வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். முதலில் எங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் எங்களுக்கு குழந்தை பிறந்த பிறகு எங்களை ஏற்றுக் கொண்டார்கள்.

**நீங்கள் திருமணம் செய்யும் போது பெரியார் இயக்கங்களுடன் தொடர்பில் இருந்தீர்களா?**

இல்லை. எனக்கு அறிவியல் சார்ந்து முற்போக்கு சிந்தனை மட்டும் உண்டு. நான் பெரியாரின் இயக்கத்திற்கு வந்ததற்கு காரணம் சுக்கம்பாளையம் வடிவேல், மணிகண்டன் இவர்களின் மூலமாகத்தான் வந்தேன். 2012 - ல் இருந்து பெரியார் இயக்கக் கொள்கைகளை கடைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்.

**தாலி தமிழர் பண்பாடா? இந்துப் பண்பாடா?**

தாலி இந்துமதப் பண்பாடோ, தமிழர் பண்பாடோ இல்லை. முதலில் இந்துமதப் பண்பாடு இல்லை என்று இராமனுஜ தாத்தாச்சாரியார் எழுதிய சடங்குகளின் கதை என்னும் நூலில் 41 ம் பக்கத்தில் எல்லாத் திருமணங்களிலும் “மாங்கல்யம் தந்துநாநே ம்மஜீவந ஹேதுநா” என்கிற சுலோகம் ஒலிக்கும் போதுதான் தாலி கட்டுகிறார்கள். இந்த சுலோகத்துக்கு வயது என்ன? என்று பார்த்தால் வேத காலத்திலோ வேத மந்திரத்திலோ இந்த தாலி என்கிற சடங்கே இல்லை. மாங்கல்ய தாரணம் அதாவது தாலி கட்டுவதற்கென்று வேதத்தில் மந்திரமே இல்லை. இது குறிப்பிடப்படவே இல்லை. இந்த சுலோகம் இடையில் நுழைக்கப்பட்டது.சங்க காலத்தில் தமிழர்களிலே தாலி கட்டும் பழக்கம் இல்லை.

**தாலியை அகற்றணும் என்று முடிவு எடுக்க காரணம் என்ன? எப்போது நீங்கள் தாலியை அகற்றினீர்கள்?**

பெரியார் கொள்கையை ஏற்றுக் கொண்ட தற்குப் பிறகு பெண்களுக்குத் தாலி தேவையில்லாத ஒன்று என்று உணர்ந்தேன். அதை அகற்றுவது என்று நாங்கள் இருவருமே முடிவு செய்தோம். சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம் சார்பாக மாட்டுக்கறி உணவுவிழா - தாலி அகற்றும் விழா 3-4-2015 ல் சூலூர் எஸ்.ஆர்.எஸ் திருமண மண்டபத்தில் நடப்பதாக இருந்தது.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தாலி அகற்றும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஒரு சில காரணங்களால் அந்த நிகழ்ச்சி நடக்கவில்லை. நாங்கள் அந்த நிகழ்ச்சியில் தாலியை அகற்றி விடலாம் என் முடிவு செய்தோம். விழா நடக்காததால் நாங்களே எங்களுடைய வீட்டில் தாலியை அகற்றி விட்டோம்.

**திருமணமான பெண்கள் கண்டிப்பாக தாலி அணிய வேண்டும், தாலி புனிதம் என்கிறார்களே இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?**

திருமணமான பெண்கள் தாலி அணிந் திருந்தாலும் கணவரிடம் சண்டை போட்டு ஒரு கட்டத்தில் அதிகமாகச் சண்டை ஏற்பட்டு, கணவன், மனைவியை அடிக்கும் போது அந்த மனைவி “நீ கட்டியிருக்கிற தாலி இருக்கிறதால் தானே அடிக்கிறாய், இந்தா உன்னுடைய தாலி” என்று

கழற்றி வீசிவிட்டு வந்துவிடுகின்றனர். மீண்டும் சிறிய இடைவெளிக்குப் பிறகு இருவரும் சேர்ந்து வாழும்போது தாலியைப் போட்டுக் கொள்கிறார்கள்.

இப்படியாக பெண்கள் தன்னுடைய உரிமைக்கு ஒரு பிரச்சனை என்று வரும்போது பெண்களே தாலியை கழற்றி எடுத்த வீசிவிடுகிறார்கள். தாலியைப் புனிதம் என்று சொல்லும் இந்து அமைப்பினரே காதலர் தினத்தன்று நாய்களுக்கு தாலிகட்டித் திருமணம் செய்து வைக்கின்றனர். தாலியை புனிதம் என்று சொல்கிறவர்களே இதையும் செய்கிறார்கள்.

தாலியைப் புனிதம் என்று சொல்கிறவர்களே... தாலி கட்டியவுடன் இவள் நமக்குச் சொந்தமானவள் என்பதற்கான ஒரு அடையாளம். அடிமைச் சின்னம். இனி நமக்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் மனைவி செய்ய வேண்டும். தனக்கு ஒரு அடிமை. தன்னுடைய குடும்பத்திற்கு ஒரு சம்பளமில்லாத வேலைக்காரி. எங்கே போக வேண்டுமென்றாலும் தன்னுடைய ஆலோசனையில் செல்ல வேண்டும். எந்த ஒரு தன்னிச்சை முடிவும் எடுக்கக் கூடாது. இதற்கான ஒரு அடையாளம்தான் தாலி.

**கடவுளர் திருக்கல்யாணம் மற்றும் அதில் தாலி கட்டும் நிகழ்வுகள் பற்றி கருத்து என்ன?**

இம்மாதிரித் திருமணங்கள் எல்லாம் மக்களை இந்தச் சோம்பேறிப் பார்ப்பனர்கள் ஏமாற்றவே தவிர வேறு எதுவும் இல்லை. இதையெல்லாம் மக்கள் சிந்திக்க வேண்டும். நாத்திகர்கள் நாங்கள் சொல்ல வேண்டியது இல்லை. திருக்கல்யாண நிகழ்வில் நடப்பதைப் பாருங்கள். மணமகனான கடவுள் பக்கத்தில் இருப்பார் ஆனால் மணமகளான பெண் கடவுளுக்குப் பார்ப்பனர்தான் திருமாங்கல்யம் கட்டுவார். இதை மக்கள் எல்லாம் வணங்குகிறார்கள்.

**இருவரிடமும் கேள்வி**

**இந்த வாழ்க்கை முறையை தங்களது குடும்பத்தினரும், உறவினரும், சமூகத்தினரும் எப்படி பார்க்கிறார்கள்? நீங்கள் அதை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

இந்து மதத்தில் கணவன் இறந்ததற்கு பிறகு பூ, பொட்டு எல்லாம் இல்லாமல் வாழவேண்டும். இந்த சமூகத்தில் அவளுக்கு விதவை என்கிற பட்டமும் உண்டு. வெளியில் போகும் போது விதவையை பார்க்கக் கூடாது என்கிற மூடநம்பிக்கையும் உண்டு. ஆனால் பெரியார் கொள்கையில் இருக்கும் நாங்கள் வாழும் போதும், இறந்ததற்குப் பிறகும் தாலி இல்லாமல் இருக்கலாம். எப்போதும் போல இயல்பாக இருக்கலாம். ஒரு சுதந்திரப் பெண்ணாக வாழலாம்.

இந்தச் சமூகத்தின் பார்வையில் உறவினர்கள் சொல்வது, பத்தோடு பதினொன்றாக தாலி, சடங்கு, சம்பிரதாயங்களைச் சார்ந்துதான் வாழணும் என்கிற ஒரு கருத்து எங்களது வீடுகளிலும், உறவினர்களிடமும் இருக்கிறது. அதைப்பற்றி எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. எங்கள் மனதிற்கும், அறிவிற்கும் சரி என்று பட்ட வாழ்க்கை முறையில் எங்கள் வாழ்நாளிலேயே வாழ்ந்து விட்டோம் என்ற மனநிறைவுடன் வாழ்கிறோம்.

# ‘விடுதலை வெளி’




‘விடுதலைவெளி’ சார்பில் கடந்த ஆண்டு ஜூலை 1, 2, 3 ஆகிய நாட்களில் நாகர்கோவில், களியக்காவிளை பகுதிகளில் மகளிர்சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்தோம். குடும்பத்தோடு பலரும் பங்கேற்று மகிழ்ந்தனர். ‘கட்டுக்கள் தளர்த்தி இயல்பாய்த் துளிர்க்க’ என்ற முன்மொழியுடன் முன்னெடுக்கப்பட்ட அந்தப் பயணம் - இந்த ஆண்டு கேரள மாநிலம் ‘வயநாடு’ பகுதியில், செப்டம்பர் 9, 10, 11 சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று நாள் பயணம். மூன்று நாட்களுக்குரிய உணவு, பயணம், தங்குமிடம் ஆகியவற்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 2500 செலவாகலாம். திட்டம் முழுமையான பிறகு சரியான தொகை அறிவிக்கப்படும். காலாண்டுத் தேர்வுகள் அந்த நாட்களில் வந்தால், காலாண்டுத் தேர்வு விடுமுறை நாட்களில் பயணம் நடைபெறும். பங்கேற்க விரும்புவர்கள் முன்பதிவு செய்யுங்கள். பங்கேற்பவர்களின் எண்ணிக்கையைப் பொருத்து பயணம் இறுதி செய்யப்படும்.

தொடர்புக்கு:
திருப்பூர் வேணி, தாராபுரம் பூங்கொடி

தமிழில்: **பிரபாகரன் அழகர்சாமி**

# முழங்கால் மூட்டுகளுக்குத் தீங்கு விளைவிக்கும் 'யோகா'

மருத்துவர் அசோக் ராஜகோபால் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்றவர். கடந்த 30 ஆண்டுகளில் 25,000 க்கும் மேற்பட்ட முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளைச் செய்து சாதனை படைத்தவர். இந்தத் துறையில் இந்தியா விலேயே முன்னோடியாகத் திகழ்பவர். இவர் தன் அனுபவத்தில், பல முன்னணி யோகா குருக்களுக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்திருப்பதாகச் சொல்கிறார்.

யோகா என்பது, பல ஆயிரம் கோடி ரூபாய் பணம் புரள்கிற சர்வதேசத் தொழில் துறையாக இருப்பதாகவும், வயது முதிர்ச்சியின் பாதிப்புகளில் இருந்து மீட்கக்கூடிய வல்லமை கொண்டதாகவும், ஒழுங்காகப் பின்பற்றுகிறவர்களை வலிமையானவர் களாகவும், மன அமைதி கொண்டவர்களாவும் ஆக்கும், என்றெல்லாம் சொல்பவர்களுக்குச் சவால் விடுக்கும் அளவுக்கு அமைந்திருக்கிறது டாக்டர் அசோக் ராஜகோபால் கொடுக்கும் எச்சரிக் கைகள்.



தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் உலக ளாவிய யோகா சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கி யிருக்கும் பாபா ராம்தேவைப் போன்ற மிகப் பிரபலமான யோகா பயிற்சியாளர்களில் சிலர், சுவாசப் பயிற்சிகள் மூலம் எச்.ஐ.வி எய்ட்ஸ் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களைக் குணப்படுத்த முடியும் எனச் சொல்லிவருகிறார்கள். வட அமெரிக்கவில் மட்டும், ஆண்டுக்கு 35,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவுக்கு யோகா உபகரணங்களுக்காகச் செல வழிக்கப்படுகிறது. சுமார் ஒன்னரைக் கோடி மக்கள் அங்கே யோகா வைப் பயிற்சிசெய்கிறார்கள்.

ஆனால், டாக்டர் ராஜகோபாலின் கூற்றுப் படி, உடல் பாகங்களை அதீதமான அளவில் இழுத்து முறுக்கிச் செய்யப்படும் உடற்பயிற்சிகளினால் (Extreme Streching Exercise), மூட்டுப் பகுதிகள் அதிக அழுத்தத்திற்கு உள்ளாகின்றன. இது Arthritis எனப்படுகிற மூட்டு வீக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துகிறது. மூட்டு மற்றும் எலும்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் யோகா பின் பற்றுபவர்களிடம் அதிகமாகத் தான் காண்பதாகவும் அவர் சொல்கிறார்.

மேலும் 'தி டெய்லி டெலிகிராஃப்' நாளிதழுக்கு அவர் வழங்கிய பேட்டியில் குறிப் பிட்டவை என்னவென்றால்,

"முறையாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையில் யோகா பயிற்சி செய்யப் பட்டால் அது சிறப்பான ஒரு விசயமாக இருக்கலாம். அதாவது, முறையான பயிற்சிகளும், யோகா நிலைகளில் உடலை வைத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு தேவையான உடல் வலிமை கொண்டவர்களும் முறையான பயிற்சி செய்யலாம். ஆனால் பொத்தாம் பொதுவாக அனைத்து மக்களையும் கடுமையான யோகா நிலைகளைப் பயிற்சி செய்ய உட்படுத்துவது அவர்களுக்கு பிரச்சனைகளைத்தான் கொடுக்கும்.

பல யோகா குருக்களே, அவர்கள் மேற் கொள்ளும் கடுமையான யோகா நிலைகளினால் மூட்டு சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. முழங்காலை வளைத்து, மடித்துத் செய்யப்படும் கடுமையான யோகா நிலைகள், அத்தகைய எந்தவித உடல் பயிற்சியை செய்து பழக்கப்படாதவர்களுக்கு, மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

நூற்றுக்கும் மேற்பட்ட மக்களை ஒரு வகுப்பில் கொண்டு நடத்தப்படும் யோகா பயிற்சிகளில், பயிற்சியை மேற்கொள்பவர் களிடத்தில் இத்தகைய பிரச்சனைகளை அதிகமாகக் காணமுடிகிறது. பல யோகா குருக்களுக்கு முழங் கால் மற்றும் மூட்டு சம்பந்தமான பிரச்சனைகள் வருவதற்கு 'வஜ்ராசனா' என்கிற யோகா நிலைகூட காரணமாக இருந்திருக்கிறது."

இந்தியாவில் Yogalife Center என்கிற அமைப்பை நடத்திவருகிற சாவித்ரி குப்தா என்பவர், யோகா பயிற்சியினால் உடல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருப் பதை ஏற்றுக்கொள்வதாகவும், ஆனால் முறையான பயிற்சிகளின் மூலமும், கடுமையான பயிற்சிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக, மெதுவாகக் கற்றுக் கொண்டு பின்பற்றுவதன் மூலமும் அத்தகைய பாதிப்புகளை தவிர்க்க முடியும் என்றும் கூறகிறார்.

பிரிட்டனில் 1910ஆம் ஆண்டு முதன்முதலில் ஒரு யோகா ஆர்வலர்கள் குழு தொடங்கப் பட்டுள்ளது. ஆனால், 1950 களில் சர் யெகுடி மெகுனின் என்கிற பிரபல வயலின் இசை கலைஞருக்கு யோகா கலையின் முன்னோடியான பி.கே.எஸ் அய்யங்கார் என்பவர் பயிற்சி கொடுக்க ஆரம்பித்த பிறகுதான் அங்கு யோகா பரவலாக கவனத்தைப்பெற்றது. அதன் பிறகு, பிரபல இசைக் குழுவான பீட்டில்ஸ் (Beatles), இந்தியாவிற்குச் சென்று ரிஷிகேஷில் இருந்த குரு மஹரிஷி மகேஷ் யோகி என்பவருடைய ஆசிரமத்தில் யோகா முகாமில் பங்கேற்றபின், அதிகம் கவனம் பெற்றது.

*தி டெலிகிராஃப், 23.10.2010*





அதி அசுரன்

# இந்து மதம் உள்ளவரை 'சேரி பிஹேவியர்' பேசப்படும்

விஜய் டிவி யின் 'பிக் பாஸ்' நிகழ்ச்சி, பெரும் விளம்பரத்தைப் பெற்றுள்ளது. திராவிடர் இயக்கங்களின் இளைஞர்கள் - மாணவர்கள் சாதி ஒழிப்பு நோக்கில் இந்த நிகழ்ச்சியைக் கடுமையாக எதிர்க்கின்றனர். இந்து இயக்கங்களோ, இந்து மதச் சிந்தனைகளின் ஆதிக்கம் விவாதமாகக்கூடாது என்ற எண்ணத்தில் எதிர்க்கின்றனர்.

பிக் பாஸில், பார்ப்பன திரைக்கலைஞர் காயத்திரி என்பவர், 'எச்சை', 'சேரி பிகேவியர்' போன்ற பல ஜாதித்திமிர், பணத்திமிரான சொற்களைப் பயன்படுத்துகிறார். அதை நிகழ்ச்சி வடிவமைப்பாளர்களும் அப்படியே அனுமதிக்கிறார்கள். ஒருங்கிணைப்பாளர் கமலஹாசனும் அதற்கு மழுப்பலான பதிலைத் தருகிறார். அதனால், பிக் பாஸையும், கமலஹாசனையும், விஜய் டிவியையும், காயத்திரியையும் எதிர்த்து சமூகவலைத் தளச் செயல்பாட்டாளர்கள் கொதித்து எழுந்துவிட்டனர். இந்த எழுச்சியை வரவேற்கிறோம். ஆனால், நம் எதிர்வினையைக் காட்ட வேண்டிய பல முக்கிய இடங்கள் இன்னும் இருக்கின்றன.

இந்தியா முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் 'சேரி' என்று தனி வாழ்விடம் இருக்கிறது. தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களிலும் இருக்கிறது. பிற்படுத்தப் பட்டவர்கள் வசிக்க, 'ஊர்' அல்லது 'குடியானத் தெரு' என்று தனியாக இருக்கிறது. பார்ப்பனர்கள் மட்டும் வாழ அக்ரஹாரங்கள் இருக்கிறது. அக்ரஹாரங்கள் இன்று நவீனமயமாகி, பெரு நகரங்களில் 'பிராமின்ஸ் ஒன்லி அப்பார்ட் மெண்ட்டு'களாக உள்ளன.

'சேரி பிகேவியர்' என்ற சொல்லுக்கு அடிப்படைக் காரணமே இந்த அக்ரஹாரம் - ஊர் - சேரி என்ற ஏற்றத்தாழ்வான வாழ்விட முறைகள் தானே? அந்த முறையை எதிர்த்து கருத்துப்பேசியவர்கள் எத்தனை பேர்? குறைந்தபட்சம் முகநூலில் 'ஊர் - சேரித் தீண்டாமையை ஒழிப்போம்' என்று ஒரு ஸ்டேட்டஸ் போட்டவர்கள் எத்தனை பேர்?

இந்த ஏற்றத்தாழ்வான வாழ்விட முறைக்கு அடிப்படையாக இருப்பவை - இந்து மதத்தின் வேதங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், பண்பாடு, பழக்க வழக்கங்கள் இவற்றை நடைமுறைப் படுத்தப் பயன்படும் கடவுள்கள், கோவில்கள், நாட்டார் தெய்வ, குலதெய்வ வழிபாடுகள் போன்றவை ஆகும்.

**ஊர் – சேரிப் பிரிவினைக்கு அடிப்படையன மனுசாஸ்திரம்**

"இவர்கள் அனைவரும் பட்டணத்திற்கும் ஊருக்கும் வெளியில், மரத்தடி, தோப்பு, சுடுகாட்டிற்குச் சமீபமான இடத்தில் இவர்களது தொழில் இன்னதென்று பிறருக்குத் தெரியும்படி, தொழிலைச் செய்துகொண்டு வாழ வேண்டும்."

"இவர்களுக்கு உலோக பாத்திரங்கள் கூடாது. அவர்கள் தீண்டின பாத்திரங்கள் சுத்தம் செய்தாலும் பரிசுத்தமாகாது. அவர்கள் நாய் வளர்க்கலாம். மாடு முதலியவற்றை வைத்து வாழக்கூடாது. பிணத்தின் துணியை மட்டுமே உடுத்த வேண்டும். தங்கள் ஜாதியிலேயே திருமணம் செய்ய வேண்டும்."

- மனுசாஸ்திரம், அத்-10, ஸ்லோகம் 49 53

பார்ப்பன, பி.ஜே.பி யின் காயத்திரியையோ, கமலஹாசன், விஜய் டிவிக்களையோ எதிர்ப்பதில் நேர்மை இருந்தால், நாம் மேற்கண்ட ஏற்றத்தாழ்வான வாழ்விட முறை, அதை உருவாக்கிய மேற்கண்ட அனைத்தையும் எதிர்க்க வேண்டும். இதுவரை இல்லாவிட்டாலும், இனிமேலாவது எதிர்க்க வேண்டும்

தோழர் பெரியார் இவை அனைத்தையும் எதிர்த்துப் போராடினார். "தாழ்த்தப்பட்டவர்களை அக்ரஹாரத்தில் குடியிருக்கச் செய்யவேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனியாகச் 'சேரி' இருப்பதை ஒழிக்க வேண்டும்." என்றார். ( விடுதலை ஏடு - 10.01.1947)

திமுக ஆட்சியின் போது 1972 ஜூன் 23ஆம் நாள் நொய்யலில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு பெரியார் பேசுவதைக் கேளுங்கள்:

“இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு, அரசாங்கம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்றேன் என்று கூறி ஊருக்கு வெளியே, ஒதுக்குப் புறத்தில் வீடுகள் கட்டிக் கொடுக் கின்றார்கள். முன்பு ஊருக்கு வெளியே சேரியில் குடி இருக்கின்றதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம். தாழ்த்தப்பட்ட மக்களைப் புதிய சேரியில் தனியாகக் குடி ஏற்றுவதாகத் தானே ஆகின்றது. அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். மற்ற மக்களோடு கலந்து வாழச் செய்ய வேண்டும்.” என்றார்.

இன்றும், அரசு சார்பில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டிக்கொடுக்கப்படும் வீடுகள் ஒவ்வொரு கிராமத்திலும் பிற்படுத்தப்பட்டவர் களுக்குத் தனியாகவும், தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனியாகவும் கட்டிக்கொடுக்கப்படுகிறது. ஊர் - சேரி என்ற தீண்டாமை அரசாங்கத்தாலேயே பின்பற்றப் படுகிறது. வழக்குக் கொடுப்பவர்கள் அரசை எதிர்த்தும் கொடுக்க வேண்டும்.

அரசிடம் வேலை வாங்குவது உடனே நாளைக்கே நடந்துவிடுவதல்ல. அதுவரை நாம் காத்திருக்க முடியாது. முதற்கட்டமாக, கிராமங் களில் வாழும் முற்போக்காளர்கள், குறிப்பாக பிற்படுத்தப் பட்டவர்கள் தங்களது சொந்த ஊர் களில், தங்களுக்குச் சொந்தமான காலி இடங்களை - அதே ஊரின் அருகில் சேரியில் வசிக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கு வழங்க வேண்டும். இலவசமாக வேண்டாம். அந்த ஊரின் மார்கெட் விலைக்கே விற்பனை செய்ய முன்வரவேண்டும். ஒருவேளை வாடகைக்கு விடுவதாக இருந்தால்கூட, அந்த ஊரின் சேரியில் வசிக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும்.

நாம் முதலில் இயங்கத் தொடங்குவோம். அரசாங்கம் நம் பின்னால் வரும். 1928 ல் தொடங்கப் பட்ட சுயமரியாதைத் திருமணங்கள், ஜாதி மறுப்புத் திருமணங்களுக்கு அன்று சட்டப் படியான அங்கீகாரம் கிடையாது. அதை எல்லாம் தோழர் பெரியார் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வில்லை. தமது தோழர்களைத் துணிவுடன் திருமணம் செய்ய வைத்தார். அதன் பிறகு அண்ணா காலத்தில் 1968 தான் அவை சட்டப்படி செல்லுபடி ஆகும் என்ற நிலை வந்தது.

தோழர் பெரியாரைப் பின்பற்றும் இயக்கங் களின் தோழர்கள் முதலில் இதுபோன்ற கடமை களில் இறங்க வேண்டும். ஒரு சிலர் அப்படி ஏற்கனவே செயல்பட்டிருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை மள மளவென உயர வேண்டும்.

**‘கள்ளர்’ என்றாலும் வாடகைக்கு வீடு கிடைக்காது**

தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, சமுதாயத்தில் ஆதிக்கவாதிகள் போல, மனப்பால் குடித்து வாழும் பல பிற்படுத்தப்பட்ட ஜாதிகளைச் சேர்ந்தவர்களும் இதே போன்ற இழிசொற்களைக் கேட்டிருப்பார்கள். அதன் வலியை அனுபவித்திருப் பார்கள்.

குறிப்பாக, தென் மாவட்டங்களிலேயே பல நகரங்களில்கூட கள்ளர், மறவர், தேவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுக்க மாட்டார்கள். பிள்ளை மார், வன்னியர், கவுண்டர், முத்தரையர், நாயக்கர் உள்பட பல பிற்படுத்தப்பட்ட ஜாதியினரும், கிராமங்களில் தங்கள் சொத்துக்களை விற்றால்கூட, தமது ஜாதிக்காரர்களுக்கே விற்கமுடியும். வேறு ஒரு பிற்படுத்தப்பட்ட ஜாதிக்குக்கூட விற்பனை செய்து விட முடியாது என்ற அவலநிலை இன்றும் உள்ளது.

அப்படி ஒரு பெரும்பான்மை ஜாதி உள்ள கிராமத்தில், அந்த ஜாதி அல்லாத வேறு ஒரு ஜாதியைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டவர் நிலமோ, வீடோ வாங்கி விட்டால்கூட, அவர் அந்த ஊர்க்காரராகக் கருதப்படமாட்டார். இறுதிவரை ஒதுக்கப்பட்டே இருப்பார். எதிரியாகவோ, தாழ்ந்தவராகவோ கருதப்படுவார். அனைத்து பிற்படுத்தப்பட்ட ஜாதியினரும், அவரவர் ஜாதி களால் பெருமைப்பட்டுக் கொள்ளும் இடங்களும் உள்ளன. அசிங்கப்படும் இடங்களும் உள்ளன.

இந்து மதம் ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட ஜாதியினருக்கும் ஒரு குணத்தைக் கற்பித்துள்ளது. கற்பிக்கப்பட்ட அந்தக் குணங்களைப் பொறுத்தே, ஒவ்வொருவரும் சமுதாயத்தில் மதிப்பைப் பெறு கிறார்கள். இந்த, இந்துமதப் பொதுப்புத்திகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்றும், எப்போதும், எங்கும் பெரும் அவமதிப்பை மட்டுமே உண்டாக்குகின்றன. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அவமதிப்பையும் - மதிப்பையும் சம அளவில் வழங்குகின்றன.

எனவே, தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப் பட்டவர் அனைவருக்கும் இருக்கும் இழிநிலைகளை ஒழிக்க, இந்த இரட்டை வாழ்விடங்கள், இதற்கு அடிப்படையான இந்து மதத்தின் வேதங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், பண்பாடு, பழக்க வழக்கங்கள் இவற்றை நடைமுறைப்படுத்தப் பயன்படும் கடவுள்கள், கோவில்கள், நாட்டார் தெய்வ, குலதெய்வ வழிபாடுகள், ஜல்லிக்கட்டுகள் அனைத்தையும் எதிர்க்க முன்வர வேண்டும்.

திராவிடர் இயக்கங்களின் இளைஞர்களும், மாணவர்களும் இந்த ஊர் - சேரிப் பிரிவினைகள், அதற்குக் காரணமான இந்துமத வேதங்கள் சாஸ்திரங்கள், கடவுள்களை எதிர்த்துப் பல ஆண்டு களாகப் போராடி வருகிறார்கள். அந்தத் தோழர் களும் பிக் பாஸ் நிகழ்ச்சிக்கு எதிராகப் போராடு கிறார்கள். அவர்களின் எதிர்ப்பு நேர்மையானது.

ஆனால், இந்த நிகழ்ச்சிக்காக மட்டும் ‘சேரி பிகேவியர்’ பற்றி ஸ்டேட்டஸ் போடுபவர்களும், அதை ட்ரெண்ட் ஆக்குபவர்களும் மேற்கண்ட வரலாற்று உண்மைகளை அறிந்துக்கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் அனைத்தையும் எதிர்த்து சமூகவலைத்தளங்களில் கருத்துத் தெரிவிக்க வேண்டும். கருத்துச் சொல்வதோடு நிற்காமல், தத்தம் வாழ்க்கையிலும் செயல்படுத்த வேண்டும்.

# பார்ப்பனத் தலைமையில் உள்ள நாட்டார் தெய்வங்கள்

**தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகமும், சாதி ஒழிப்பு முன்னணியும் திருச்சியில் 09.07.2017 ல் நடத்திய காட்டாறு 'குலதெய்வ - நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ்' திறனாய்வு அரங்கில், தோழர் பிரபாகரன் ஆற்றிய உரை**

இந்தியச்சமூகம் அடிப்படையிலே ஒரு ஜாதியச் சமூகம் தான். நாம் எல்லோரும் அறிந்தது தான். அதுவும் அதுஒரு உயர்ஜாதி ஆனாதிக்கச் சமூகம். இன்னுமும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் உயர்ஜாதி பார்ப்பனியச் சமூகம். பார்ப்பனியச் சமூகம் என்று சொல்லும்போதே அது அடிப்படையில் இந்து மதத்தோடு பிணைக்கப் பட்டுள்ளது. பார்ப்பனியம்தான் இந்து மதம், இந்து மதம் தான் பார்ப்பனியம் என்று வேறுபடுத்தி பார்க்க முடியாத அளவுக்கு பிணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்து மதத்தின் ஒரு பிரிவாகத்தான் நாட்டார் மதத்தையும், நாட்டார் சமயங்களையும், நாட்டார் தெய்வத்தையும் பார்க்க வேண்டி இருக்கிறது. அதற்கான எல்லாக் கூறும் அதற்குள் இருக்கிறது என்பதுதான் இந்த அரங்கத்தின் விவாதப் பொருளாக இருக்கிறது. இந்த இதழின் உட்கூறும் அதுவாகத்தான் இருக்கிறது. இந்த இதழை நான் வாங்கியவுடன் இது ஒரு சிறப்பிதழ் என்று நினைத்தேன். அதன்பிறகு வீட்டில் போய் பார்த்த பிறகுதான் இது ஒரு எதிர்ப்பிதழ் என தெரிந்தது.

இயல்பாகவே நாம் என்ன நினைக்கிறோம் என்றால் நாட்டார் மதம் என்றாலே அதில் ஜாதியை எதிர்க்கக்கூடிய ஒரு கூறு அதில் இருக்கிறது என்ற எண்ணம் உள்ளது. கடந்த வாரம் நான் பணி நிமித்தமாக மூன்று வெவ்வேறு மதங்களைச் சார்ந்த நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தது. அதில் ஒரு நண்பர் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்.

என்னை சந்தித்த இரண்டு மூன்று நிமிட சந்திப்புகளிலே அவர் என்னைக் கேட்ட கேள்வி. நான் மிகவும் அறுவெறுப்பாக உணர்ந்த கேள்வி, உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறதா? இல்லையா? என்ற கேள்விதான். என்னை அவருக்கு அதற்கு முன்பு தெரியாது, அவரையும் எனக்கு அதற்கு முன்பு தெரியாது. அடுத்த எங்கள் உரை யாடலே கடவுள் நம்பிக்கை உள்ளதா? இல்லையா? என்பதை நோக்கி செல்லக்கூடிய ஒரு புள்ளியை அவர் ஏற்படுத்துகிறார்.

அடுத்த நன்பர் பௌத்தத்தின் மீது நம்பிக்கை உள்ளவர். பௌத்தத்திற்கு மதம் மாறியவர். அவர் என்னிடம் கேட்ட கேள்வி, நீங்கள் எப்போது பௌத்தத்திற்கு மாறப் போகிறீர்கள்? ஏன் இன்னும் மாறவில்லை? ஒரு நீண்ட விவாதமே நடந்தது. எங்களுக்குள் ஒரு குடுமிபிடிச் சண்டையே வந்து விடும் போல் இருந்தது.




அடுத்தவர் கிறிஸ்த்துவ மதத்தைச் சார்ந்தவர் ஓய்வு பெறும் வயதைச் சார்ந்தவர். அவர் ஏன் நீங்கள் கிறிஸ்த்துவ மதத்தை விட்டு விலகிச் செல்கிறீர்கள் என்று கேட்டார். மதத்திற்கு எதிரான பாதையில் செல்கிறீர்கள்? என்று கேட்டார். எதற்காக இந்த மூன்று சமய நம்பிக்கையாளர்களுடனான உரை யாடலை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன் என்றால் அடிப்படையிலே ஒரு தனிநபருக்கும் இன்னொரு தனி நபருக்குமான உரையாடலே மதம் சார்ந்ததாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

நான் மத நம்பிக்கை உள்ளவனா? இல்லாதவனா என்பதே அடுத்த உரையாடலுக்கான துவக்கமாக இருக்கிறது. இல்லையென்றால் அவர்கள் அடுத்த உரையாடலுக்கு தயாராகவே இல்லை. அந்த மூன்று நபர்களிடமும் என்னுடைய நிலையை எந்த சூழலிலும் விட்டுக் கொடுக்க

தயாராக இல்லை, அதன்பறிகு அவர்கள் என்னோடு உரையாட விரும்பவில்லை. இது தான் எதார்த்தம். அன்மைக் காலத்தில் ஒரு ஏழு நாட்களுக்கு முன்பு நடந்தது.

காரல் மார்க்ஸ் அவர்கள் சொல்லுவார் "மதத்தை நாம் தீவிரமாக விமர்சிக்காமல் சமூகக் கட்டமைப்பில் எந்தவிதமான மாற்றத்தையும் செய்ய முடியாது" என்று சொல்லுவார். ஆக இந்த காட்டாறுவின் அடிப்படை அம்சமே மதத்தை - அதைத் தாங்கிபிடிக்கும் ஜாதியை விமர்சனம் செய்யக் கூடியதாக இருக்கிறது.

அந்த அடிப்படையில் காட்டாறு மாத இதழின் ஆசிரியர் குழுவைச் சார்ந்த தோழர் களையும், கள ஆய்வு செய்த தோழர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். காட்டாறு இதழைப் பொருத்தவரையில் தாழ்த்தப்பட்ட ஜாதிகளாக இருக்கக்கூடிய பள்ளர், பறையர், சக்கிலியர்கள் மற்றும் இடைச் சாதிகளாக இருக்கக் கூடிய கள்ளர், வன்னியர், செட்டியார் என இந்த குழுக்கள் வழிபடக்கூடிய நாட்டர் தெய்வங்களைப் பற்றிய கள ஆய்வு செய்து ஒரு அறிக்கையாக, ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒட்டு மொத்தமாக இந்த இதழில் வரக்கூடிய ஆய்வுகளைப் பார்த்தால் இந்த நாட்டார் தெய்வங்கள் ஏதோ ஒரு வகையில் ஜாதியை தூக்கிப் பிடிக்கிறது. அந்தந்த ஜாதிக்குள்ளாக திருமணம் செய்வதாக இருக்கட்டும், அந்தந்த ஜாதிக்குள்ளாக வரி வசூல் செய்வது கொள்வதாக இருக்கட்டும், அந்தந்த ஜாதிகள் இருக்கக்கூடிய நிலப்பரப்பிலே, வாழ்விடங்களிலே தங்களுக்கான தெய்வங்களை உருவாக்கி மற்ற சமூகத்தினரை ஏற்றுக் கொள்ளா தவராக, அவர்களின் உரிமையை ஒத்துக் கொள்ளா தவராக நாம் பார்க்கிறோம்.

மற்றுமொரு முக்கியமான செய்தி அவர்கள் எல்லோரும் பார்ப்பனத் தலைமையை ஒத்துக் கொள்கிறார்கள். அந்தப் பூசாரிகள் அனைவருமே தாங்கள் பார்ப்பனரிடம் ஆலோசனை பெற்றுத் தான் செய்வோம் என்று கூறுகிறார்கள். அவர் களைக் கேட்காமல் எப்படி செய்வது என்கிறார்கள். ஒரு சமூகம் பொய் பார்ப்பனரிடம் ஆலோசனை கேட்கிறார்.. உங்கள் தெய்வமான சாம்பானைக் குழிதோண்டிப் புதைத்து விடுங்கள். அதற்கு பதிலாக நாங்கள் தரக்கூடிய லிங்கத்தை வைத்து வழிபடுங்கள் என்கிறார்கள்.

ஆக எதோ ஒரு வகையில் பூசாரிகள் மற்றும் அந்தக் குடும்பங்கள் பார்ப்பனத் தலைமையை ஏற்றுக் கொள்கிறார்கள். எல்லாக் குல தெய்வங் களிலும், எல்லாச் ஜாதிகளிலும் நாம் பார்க்கக்கூடிய ஒரு அம்சமாக இருப்பது ஆண்,பெண் வேறு பாட்டைத் தக்கவைத்துக் கொள்வது. கோவில் வளாகத்திற்குள் அனுமதிக்க மறுப்பது, பூஜை செய்ய அனுமதிக்க மறுப்பது என தொடர்ச்சியாக பார்க்கி றோம்.

தாழ்த்தப்பட்ட ஜாதிகளில் ஒன்றாக இருக்கக் கூடிய சக்கிலியர் சமூகத்தின்ர் தங்களை உயர் குடியாக்கம் செய்து கொண்டு சமஸ்கிருத மயமாக் கலை செய்து கொண்டு மற்றுமொரு தெலுங்கு பேசக் கூடிய ஆதிக்க சமூகமான நாயுடு, நாயக்கர் ஆகியோரிடம் நாங்களும் உங்களைப் போல் தெலுங்கு பேசக்கூடியவர்கள், உங்கள் வழி மரபைச் சாந்தவர்கள் எனக்கூறி அவர்களுடன் ஒத்துப் போகிறார்கள்.

ஜாதியை தக்கவைத்துக் கொள்கிற, பார்ப்பனத் தலைமையை ஒத்துக் கொள்கிற, ஆண் பெண் வேறுபாட்டை ஏற்றுக் கொள்கிறவர்களாக இருப்பதை தொடர்ச்சியாக இந்தக் கள ஆய்வில் பார்க்கிறோம். குலதெய்வ, நாட்டார் தெய்வங் களுக்கு எதிரான பெரியார், அம்பேத்கர் அகியோரின் எழுத்துக்களிலிருந்தும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இந்த கள ஆய்வின் மூலம் பார்த்தோமென்றால் ஜாதிதான் மனிதர்களையும், ஜாதிதான் ஒவ்வொருவரின் மதத்தையும் அடை யாளப்படுத்துவதாக இருக்கிறது. ஜாதிதான் ஒவ்வொருவரையும் இயங்கச்செய்கிறது. இந்த இதழை முழுமையாக படித்து முடித்தபின்பு எனக்கு வரும் செய்தி என்னவென்றால், இந்தக் கள ஆய்வு தான் உண்மையா? நாட்டார் தெய்வங்கள் ஜாதிக்கு எதிரானவர்களாக இல்லையா? ஜாதியைத் தூக்கிப் பிடிப்பவர்களாக இருந்திருக்கிறார்களா? என்பதைத் தான் இங்கே விவாதிக்க வேண்டிய செய்தியாக இருக்கிறது.

இந்தியச் சமூகங்களிலே மதம் பற்றி நமக்கு ஒரு புரிதல் இருந்ததில்லை. ஒரு மாத காலம் விரதம் இருப்பது, சாமிக்காக செலவு செய்வது, அதற்காக நேரம் ஒதுக்குவது, சாமிக்கு பிடித்த உணவு, ஆடை உடுத்துவது என சாமிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததாக தெரியவில்லை. சாமியைப் பெரிதாக பொருட்படுத்தாத சமூகமாகத்தான் நம்முடைய சமூகம் இருந்திருக்கிறது.

ஆண்டுக்கொருமுறை ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ ஒரு வாரமோ நடக்கக்கூடிய திருவிழாவாகத்தான் இந்த குல தெய்வ வழிபாடு இருந்திருக்கிறது. சாமி இருக்கும் இடம்கூட குப்பை மேடாக, நாம் வசிக்கும் வீட்டில் கலைந்து கிடக்கும் பொருள்களைப் போல ஒழுங்கு படுத்தபடாமல் இருப்பது போல் தான் குல தெய்வக் கோவில்களும் இருந்துருக்கிறது. அந்த திருவிழாக் காலங்களில் ம்ட்டுமே சுத்தம் செய்து ஆண்டுக்கொரு முறை விழா முடிந்த பின்பு அதை ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற வேலைகளை பாக்கும் சமூகமாகத்தான் நமது சமூகம் இருந்துள்ளது. அதற்காக பணம் செலவு செய்வது, வரிவசூல் செய்வது என்ற போக்கு நம்மிடத்தில் இல்லை என்பது தான் என்னுடைய கருத்து.

பார்ப்பன ஆதிக்கம் எப்படி வந்தது, பார்ப்பனத் தலைவீடு குலதெய்வ வழிபாட்டில் எப்படி வந்தது? ஏனெனில் பார்ப்பன ஆதிக்கம்,

அதிகாரம் குலதெய்வ வழிபாட்டில் தொடர்ச்சியாக இருப்பதைப் பார்க்கிறோம். தொடக்க காலத்திலே பொதுவாக பார்ப்பனர்கள் தங்களுடைய மத வாழ்க்கையாக இருக்கட்டும், சமூக வாழ்க்கையாக இருக்கட்டும், மற்ற சமூகங்களோடு இனைந்து உறவாடியவர்கள் இல்லை. அவர்கள் தனித்துதான் இருந்தார்கள். அவர்கள் சாமி தனியாக இருக்கும். அவர்களின் வேத நூல்கள் தனியாக இருக்கும். அவர்கள் மற்றவர்களோடு கலக்கவே இல்லை.

அம்பேத்கர் ஜாதியைப் பற்றி சொல்லும் போது "பார்ப்பனர்கள் கதவடைத்துக் கொண்டார்கள், மற்றவர்கள் அவர்களைப் பார்த்து கற்றுக் கொண்டார்கள்" தங்களை, தங்களின் இருப்பிடங்களை கதவடைந்துக் கொண்டார்கள். மற்றவர்களை வெளியில் நிறுத்தி விட்டார்கள். எனவே பார்ப்பனர்களைப் பார்த்து மற்றவர்கள் கற்றுக் கொண்டார்கள்.

மற்றவர்களோடு கலக்காத ஒரு சமூகம், பிற மக்களின் கலாச்சாரத்தை, வழிபாட்டை எற்றுக் கொள்ளாத ஒரு சமூகம் எப்படி ஒரு பெரிய சமூகத்தோடு கலக்கிறது, எதற்காக அவர்கள் கலந்து விடுகிறார்கள். எதற்காக உறவாடுகிறார்கள்? வேறொன்றும் இல்லை அவர்களின் அதிகாரத்தை தக்க வைத்தக் கொள்வதற்குத்தான்.

அவர்களுக்கென்று தனியாக ஒரு வழிபாட்டு முறை கூட இல்லை. அவர்களுக்கென்று கோவில் இல்லை, உருவவழிபாடு இல்லை, சடங்கு முறை இல்லை. ஆனால் இவை எல்லாம் பௌவுத்தத்தில் இருந்தது. பௌத்தத்திற்குத்தான் மடங்கள் இருந்தது, உருவ வழிபாடு இருந்தது, சடங்குகள் இருந்தது. பௌவுத்தர்களை விரட்டிவிட்டு அவர்களிடமிருந்த நல்ல செய்திகளை பார்ப் பனர்கள் எடுத்துக் கொண்டனர்.

பார்ப்பன இந்துமதத்தில் கொல்லாமை எப்போதும் கிடையாது, பிற உயிர்களை நேசிக்கக் கூட சொல்வதில்லை. அது பௌவுத்தத்தில் உள்ளது. கொல்லாமை, களவு செய்யாதே, பிறன்மனை நோக்காதே, பிறருடைய சொத்துக்களை பறிக்காதே என பௌவுத்தம் சொன்னது தனி மனிதர்களைப் பற்றி அல்ல, அது பார்ப்பனர்களைப் பற்றி சொன்னதாகும்.

நீ தான் பொய் சொல்கிறாய், நீ தான் அடுத்தவன் சொத்தை திருடுகிறாய், நீதான் பிறர் மனைவியை அபகரிக்கிறாய் என்றது பௌத்தம். அப்போது தான் அவர்களின் பார்வை பௌத்தத்தை நோக்கித் திரும்புகிறது. முதன் முறையாக அன்பை பேசியது, சமத்துவத்தை பேசியது பௌத்த மதம். கல்வியை அனைவருக்கும் பொதுவாக்கியது பொளத்த மதம். பெண்களை பிக்குகளாக மாற்றி னார்கள் பௌத்தர்கள்.

இந்து மதத்தில் பெண்களுக்கு அப்படி ஒரு இடமே கிடையாது. மருத்துவத்தை பொதுமை ஆக்கியது பௌத்தம். இந்து மதத்திற்கு எதிராக தலைகீழாகச் சமத்துவத்தைப் பேசியது பௌத்த மதம். அதனால் பார்ப்பனர்கள் பௌத்த மடங் களைக் கொளுத்தினார்கள், பிக்குகளைக் கொலை செய்தார்கள், பௌத்தத்தின் உள்ளீடுகளை எடுத்துக் கொண்டு பௌத்தத்தையே அழித்தார்கள். அயோத்தி மிகப் பெரிய பௌத்தத் தளம்.


அயோத்தியில் பார்ப்பனர்களுக்கும் பௌத்தர் களுக்கும் நிறைய விவாதம் நடந்துள்ளது. அதனால் தான் அதைக் கைப்பற்றினார்கள். காவி பௌத்தர் களின் நிறம், பூணூல் பௌத்த அடையாளம், பௌத்தர்கள் தங்கள் ஆடை நழுவாமல் இருக்கக் கட்டிய ஒரு நூல். தாமரை பௌத்தர்களின் அடையாளம்.



பௌத்தத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய அம்பேத்கரை அவர்கள் தனதாக்கிக் கொண்டனர். 'இந்துத்துவ அம்பேத்கர்' எனப் புத்தகம் வெளியிடுகின்றனர். எனவே அவர்கள் அதிகாரத்தை தக்க வைக்க அனைத்தும் செய்கிறார்கள். பார்ப்பன அதிகாரத்தைத் தக்க வைக்க அவர்கள் அனைத்து வேலைகளையும் செய் கிறார்கள். இந்து மத்த்தைத் தூக்கி நிறுத்துவதற்காக அவர்கள் அனைத்து வேலைகளையும் செய்கிறார்கள்.

நாட்டார் தெய்வங்களுக்கும் பார்ப்பன வழிபாடுகளுக்கும் வேறபாடே இல்லையா? என நாம் கேட்க முடியும்? நிறைய வேறுபாடு இருக்கிறது. உணவில் வேறுபாடு இருக்கிறது. கோவில் கட்டமைப்பில் வேறுபாடு இருக்கிறது, பூசாரிகளின் தலைமைப் பண்புகளில் வேறுபாடு இருக்கிறது. பெண்கள் கூட நிறைய கோவில்களில் பூசாரியாக இருப்பார்கள்.

பார்ப்பனர்கள் கடுமையாக உடலை வருத்திக் கொண்டு செய்யக் கூடிய வழிபாடு எதுவும் செய்வதில்லை. பார்ப்பனர்கள் யாரும் தீ மிதிப்பதில்லை, அழகு குத்துவதில்லை, பாதயாத்திரை செல்லுவதில்லை. ஏன் செல்வதில்லை? இது இந்து மதத்தில் இல்லையா? அவர்கள் கடவுளை வணங்குவது கூட சொகுசாக வணங்கினார்கள். தீயை வணங்குவது அவர்கள் வழிபாடு, தீயை மிதிப்பது நம்முடைய வழிபாடு. இதெல்லாம் அடிப்படைப் பண்பாடாக இருந்து உண்மைதான். அனால் இப்போது அதற்கான கூறுகள் இப்போது இல்லை அதுவும் பார்ப்பனியத் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது தான் காட்டாறு வைக்கும் விமர்சனம் ஆகும்.


# பார்ப்பனர்கள்:
## எஃப்.ஐ.ஆரே போட முடியாத அபாயகரமான குற்றவாளிகள்!

உலகத்திலேயே எவ்வளவோ கொடிய குற்றங்கள் நடக்கின்றன. அதற்குக் காரணமான குற்றவாளிகள் குற்றச்சாட்டுக்கு ஆளாகின்றனர். குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு, தண்டனை அடைகின்றனர் அல்லது விடுதலை ஆகின்றனர். ஆனால், குற்றச்சாட்டே எழுப்ப முடியாத பாது காப்பான குற்றவாளிகள் - மிக மிக அபாயமான குற்றவாளிகள் பார்ப்பனர்கள் தான். அதை மிகத் திமிராக - வீடியோவாக வெளி யிட்டுள்ளார் காமெடி நடிகர் எஸ்.வி.சேகர்.

ஊர்கூடித் ‘தர்மஅடி’ கொடுப்பதைப்போல, சமூக வலைத்தளங்களில் ஒன்றுகூடி அவருக்குச் சிறப்புச் செய்தனர். கூடுதலாக, எஸ்.வி.சேகருக்கு மட்டுமல்லாமல், அனைத்துப் பார்ப்பனர்களுக்கும் புரியும்படி, இந்துத்துவம், திராவிடம் என்று ஹேஷ்டேக் களை உருவாக்கி ட்ரெண்ட் ஆக்கினர். நம் பங்குக்குச் சில தகவல்கள்.

> பார்ப்பனர்கள் எங்குமே வன்முறையில் ஈடுபடுவது இல்லை. பார்ப்பனர்கள் மீது எங்கயாவது ஜாதிக் கலவரத்தில் எஃப்.ஐ.ஆர் போட்டிருக்காங்களா? எப்போதோ முன்னோர் செய்த தவறுக்கு இப்போது பழிவாங்குவது நியாயமா? - எஸ்.வி.சேகர்.

**பகவத் கீதை – கொலைநூல்**

இந்தியாவில், எந்தப் பகுதியில் ஜாதியத் தாக்குதல்கள் - மோதல்கள் நடந்தாலும் அவற்றுக்கு முதல் குற்றவாளிகளாக பார்ப்பனர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தருமபுரி இளவரசன், கோகுல் ராஜ், மடத்துக்குளம் சங்கர் போன்ற ஜாதி கடந்த காதலர்களின் படுகொலைக்கு அடிப்படைக் காரணங்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஜாதி அடிப்படையிலான படுகொலைகள், தீண்டாமை வன்கொடுமைகள், இழிவுகள், தாக்குதல்கள் அனைத்திற்கும் அடிப்படையான காரணம் ஜாதி தானே? இதற்கு எவரும் மாற்றுக்கருத்துக் கூற இயலாது. அப்படியானால், அந்த ஜாதியை உருவாக்கியது யார்? இதோ பகவத்கீதையில் கிருஷ்ணன் கூறகிறார்.

> “சதுர் வர்ணம் மயா சிருஷ்டம்”, குண கர்ம விபாகஷ:
> தஸ்ய கர்தாரம் அபி மாம் வித்யாகர் தாரம் அவ்யயம்
> *(பகவத்கீதை - அத்தியாயம் 4 - சுலோகம்13)*

ஜாதிகளைப் படைத்தது நானே என்கிறார் கிருஷ்ணன். அதுவும் பகவத் கீதையிலேயே கூறியுள்ளார். அந்த பகவத்கீதை, இந்திய நீதிமன்றங் களிலும், புனிதநூலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஜாதி அடிப்படையிலான அனைத்து குற்றங்களுக் கும் மிக முக்கியக் காரணமான ஒரு நூலை, புனித நூலாகவே அங்கீகரித்துள்ள மக்கள்தான், இந்து மதத்தைப் பின்பற்றும் மக்கள்.

கொலைநூலே புனிதநூலாகிவிட்ட பிறகு, ஜாதிக்குற்றங்களில், முதல் குற்றவாளிகளாக அவசியம் இடம்பெற வேண்டிய பார்ப்பனர்களின் பெயர்கள் - குற்றப்பத்திரிக்கைகளிலும், எஃப்.ஐ.ஆர் களிலும் இடம் பெறாதது பெரிய வியப்பான செய்தி அல்ல. பகவத் கீதை ஜாதியை உருவாக்கியது நான் என்கிறது. மனுசாஸ்திரங்களோ, அனைத்து ஜாதியக் குற்றங்களையும் இந்துக்களின் சட்டமாக்கி வைத்துள்ளது.

> “உயர்ந்த ஜாதிக் கன்னிகையைப் புணர்ந்த தாழ்ந்த ஜாதியானுக்கு மரண வரையில் தண்டனை விதிக்க வேண்டியது. தன் ஜாதிக் கன்னிகையைப் புணர்ந்தவன் அவள் தந்தை கேட்கும் பொருளைக் கொடுத்து அக்கன்னிகையைக் கலியாணஞ்செய்து கொள்க.”
>
> - 8 வது அத்தியாயம் 366 வது ஸ்லோகம்
>
> “நற்கருமங்கள் நடைபெறுகையில், இவர்களைக் காண்பதோ, பேசுவதோ கூடாது. இவர்கள் தங்கள் வகுப்பிலேயே பெண் எடுக்கவும் கொடுக்கவும், கடன் கோடலும் வேண்டும்” *(10 : 53).*

மேற்கண்ட மனு வின் கட்டளைகள் தான் இன்று இளவரசன், சங்கர் படுகொலைகளாக நம் காலத்தில் வடிவம் பெற்றுள்ளன. ஜாதி மறுப்புத் திருமணங்கள் மட்டுமல்ல; தாழ்த்தப்பட்டோர் மீதான தீண்டாமைகள் அனைத்திற்கும் அடிப்படை யானவை பகவத்கீதையும், மனு தர்மங்களுமே. இவற்றை நடைமுறைப்படுத்தும் கருவிகள்தான் ஜாதியக்குற்றங்களுக்குக் காரணமான மக்கள்.

இவை மட்டுமல்ல; இந்து மதத்தில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற 'சூத்திரர்கள்' மீதும் - இந்து மதத்திற்கு வெளியே இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும், பார்ப்பனர்கள் கடும் தீண்டாமைக் கொடுமைகளை ஏவிவிட்டனர். எடுத்துக்காட்டாக,

"சூத்திரன் பிராமணனுடன் ஒரே ஆசனத்திலுட் கார்ந்தால் அவனது இடுப்பில் சூடு போட்டாவது அல்லது ஆசனப் பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டுத் துரத்த வேண்டும்" .- *(அ.8.சு281).*

"பாக்கியஜாதியினருக்கு ( தாழ்த்தப்பட்டவர்) நேரே உணவு பரிமாறல், ஏவலாளரைக் கொண்டு, உடைந்த சட்டியில், அன்னமிட்டு வைக்க வேண்டும். இவர்கள் ஊரிலும், நகரிலும் இரவில் திரியக்கூடாது" *(10 : 54).*

இந்த மனுவின் சட்டம்தான், கொங்கு மண்டலத்தில், 'செகுடந்தாளி முருகேசன் படுகொலை'யாக வடிவம் பெற்றது. தமிழ்நாடு முழுவதும் டீக்கடைகளில், தாழ்த்தப்பட்டோருக்குத் தனி டம்ளர், பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி டம்ளர் என்று, 'இரட்டைக்குவளை'களாக வடிவம் பெற்றுள்ளது.

இதுபோன்ற சாஸ்திரங்கள் தான் மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்களாக மாறி இன்று நடக்கும் அனைத்து ஜாதி மோதல்களுக்கும், தாக்குதல்களுக்கும் காரணமாக அமைந்துள்ளன. ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டில் கி.பி.1857 ல் கிரிமினல் சட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதுவரை நம்மை ஆண்டது இந்த மனுசாஸ் திரங்கள் தான். அவற்றின் அடிப்படையில் தான் குற்றங்களுக்குத் தண்டனைகளும், சிவில் நிர்வாக மும் நடைபெற்றது.

வடநாட்டின் சுங்கப் பேரரசு, குப்தப் பேரரசு களிலிருந்து தமிழர்களின் இராஜராஜ சோழன் போன்ற சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், தெலுங்கு விஜயநகரப் பேரரசுகளும், இஸ்லாமிய மன்னர்களும் இந்த மனுசாஸ்திரங்களின் அடிப் படையில் தான் நீதிமன்றங்களை நடத்தினர்.

இந்த மனுசாஸ்திரங்களையும், வேதங் களையும் முறையாகக் கற்று, அவற்றைத் தம் வாழ் நாளில் தவறாமல் பின்பற்றுபவன் தான் முபமை யான பிராமணன். அப்படி, பிராமணன் இந்து தர்மங்களைத் தவறாமல் பின்பற்றத் துணையாக இருப்பவன் தான் உண்மையான க்ஷத்திரியன். அப்படிப் பட்டவர்களுக்குத்தான் 'மனுநீதிச் சோழன்' என்ற அடைமொழிகள் வழங்கப்படும். அதனால்தான், தோழர் பெரியாரும், தோழர் அம்பேத்கரும் 1927 லேயே மனுசாஸ்திரத்தை எரித்தனர்.

எனவே, அனைத்து ஜாதியக்குற்றங்களுக்கும் அடிப்படைக் காரணங்கள், முதன்மைக் குற்ற வாளிகள் பகவத்கீதை - மனுசாஸ்திரம் - இந்து வேதங்கள் - இவற்றைப் பரப்புவதையே குலத் தொழிலாகக் கொண்ட பார்ப்பனர்கள் என்பது தான் வரலாற்று ரீதியான உண்மை.

இந்தியாவில் இன்றுவரை நடந்த அனைத்து ஜாதியத் தாக்குதல்களிலும், முதல் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டிய பார்ப்பனர்களை இதுவரை எவருமே, எங்குமே குற்றப்பத்திரிக்கையில் சேர்த்தது இல்லை.

இனியாவது, எங்கு ஜாதியக்குற்றங்கள் நடந்தாலும் எஃப்.ஐ.ஆரிலும், குற்றப்பத்திரிக்கை யிலும், அந்தந்தப் பகுதிப் பார்ப்பனர்களையும், அந்தக் குற்றத்துக்குத் தூண்டிய 'குற்ற நூல்' என்று பகவத்கீதையையும், மனுசாஸ்திரத்தையும் எஃப்.ஐ.ஆரிலேயே சேர்க்க முயற்சி செய்ய வேண்டும். இது சட்டப்படியும், நடைமுறை வழக்கங்களின் படியும் ஆகக்கூடிய காரியமா? என்பது வேறு செய்தி. ஆனால் முயற்சிக்க வேண்டும்.



**முன்னோர்கள் செய்த பாவத்திற்கு இப்போது பழிவாங்கலா?**

இன்றும், இப்போதும் பார்ப்பனர்கள் பூணூலை அணிந்துதான் உலாவுகின்றனர். அவர்கள் பூணூல் அணிந்தால், 'முழு பிராமணர்' ஆகிறார்கள். அவர்கள் பிராமணர் என்றால், நாம் 'சூத்திரர்' என்று ஒத்துக்கொள்கிறோம் என்றுதான் பொருள். 'சூத்திரர்' என்றால் 'பிராமணர்களின் வைப்பாட்டி மக்கள்' என்று பொருள். ஆம். அப்படித்தான் இந்து மனுசாஸ்திரம் கூறுகிறது. *(அத்தியாயம் 8; ஸ்லோகம் 415)*

பூணூல் அணியும் பார்ப்பனர்கள் அனைவரும், இந்திய அரசியல் சட்டத்தில் 372 வது பிரிவின் படியும் - இந்து சாஸ்திரங்களின் படியும் நம்மைத் 'தேவடியாள் மக்கள்' என்று கூறிக் கொண்டு தான் இருக்கிறார்கள். இதைவிட வன்முறை வேறு என்ன இருக்க முடியும்? வேறு யார், இவர்களை விடப் பெரிய வன்முறையாளர்களாக இருக்க முடியும்? பார்ப்பன முன்னோர்கள் மட்டும் குற்றவாளிகள் அல்ல, இன்று நடமாடும் பார்ப்பனர்களும் கடும் குற்றவாளிகளே!

-முன் அட்டை உள்பக்க தொடர்ச்சி

நூற்றாண்டுச் சிற்பங்களிலேயே அய்யனாருடன் இரு மனைவியரைக் காணுகிறோம். - பக்கம் 18

அய்யனாருக்கு இந்திரன் மகள்களைத் ( பூரணை, புட்கலை ) திருமணம் செய்து வைக்கின்றனர். சிவனும், திருமாலும் அய்யானரிடம் ஊர் மக்களையும், தானியங்களையும் காக்கும் பொருட்டு ஊரின் எல்லையில் அமர்ந்து அருளாட்சி செய்யுமாறு பணிக்கின்றனர்.'' - பக்கம் 73

நாட்டார் தெய்வங்கள் என்பவை ஏழாம் நூற்றாண்டிலேயே இந்து, பார்ப்பனமயமாமாக்கப்பட்டு விட்டது என்பதற்கு மேற்கண்ட நூலில் இன்னும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

மேலும், தோழர் தமிழ்ச்செல்வன் தனது பதிவில் இரண்டு கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

1. ''தான் பிறந்த மண்ணை விட்டு பிழைப்புத்தேடி வெளிச்செல்லும்போது. தன் முன்னோர்களை வணங்கி அவர்களின் காலடியிலிருந்து பிடிமண் எடுத்துச்செல்வது நாட்டார் மரபு. அது அவர்களின் மண்ணுரிமை யோடு சேர்ந்தது என தோழர் ஆர்.நல்லக்கண்ணு நேர்ப்பேச்சில் குறிப்பிட்டார்.''

2. ''இந்து மதத்தில் பிடிமண் எடுக்கும் நடைமுறை கிடையாது. ஆகவே இந்து மதம் எனப்படுகிற சைவ, வைணவ, வைதீக மதங்களுக்கும் பிடிமண்ணுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. இது எந்த மதமும் சாராத நாட்டுப்புற வழிபாட்டு மரபில் உள்ள ஒரு சடங்கு.'' என்றும் கூறியுள்ளார்.

**தொடரும் ஜாதி இழிவு:**

தான் பிறந்த மண்ணை விட்டு ஒரு தலித் வெளியூர் போனால், தலித் கோவிலில் பிடிமண் எடுப்பார். அந்த தலித் குடியிருக்கும் 'ஊரில்' உள்ள கிராமத் தெய்வக் கோவிலில் இருந்து பிடிமண் எடுக்க முடியாது. ஒரு பிற்படுத்தப்பட்டவர் அதே ஊரில் இருக்கும் சேரியில் சென்று பிடிமண் எடுக்க மாட்டார். அவரது சாதிக்குரிய நாட்டார் தெய்வத்திடமிருந்தது தான் பிடிமண் எடுப்பார். ஒருவேளை, இரு பிரிவுக்கும் பொதுவான கோவிலில், பிடிமண் எடுத்தாலும், அவை கொண்டு சென்று கோவிலாக வணங்கப்படும் இடங்கள் தனித் தனியாக - ஊர்த் தெய்வமாகவும், சேரித்தெய்வமாகவும் தான் பிரிந்துள்ளன.

கஞ்சிக்கே வழியில்லாமல், பஞ்சம் பிழைக்க வெளியூர் சென்றாலும், தனது ஜாதியை விட்டுவிடாமல் பாதுகாக்கும் ஜாதிவெறிப் பண்பாட்டின் ஒரு கூறுதான் இந்த பிடிமண் எடுத்தல் பண்பாடு. தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஒரு அடி நிலம் கூடச் சொந்தமாக வைக்க விடாதது இந்துச்சமூகம். அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த மண்ணுரிமைக்காக இந்தப் 'பிடிமண்' எடுக்கிறார்கள்? ஜாதி இழிவைப் பெருமையுடன், கடமைப் போலச் செய்ய வைப்பது தான் ஆரிய - பார்ப்பன - இந்து மதம். அதன் வெளிப்பாடுதான் இந்தப் 'பிடிமண்'

**இந்துப் பண்பாடே:**

'பிடிமண்' எடுத்தல் என்பது இந்து மதப் பண்பாடு அல்ல. என்பது மிகவும் தவறானது. கிறிஸ்துவர்களோ, இஸ்லாமியர்களோ, இந்த மதங்களில் இருக்கும் பிற்படுத்தப்பட்டவரோ, தாழ்த்தப்பட்டவரோ பிடிமண் எடுப்பது இல்லை. பிடிமண் எடுத்து ஏசுநாதருக்கோ, மேரி மாதாவுக்கோ, அல்லாவுக்கோ கோவில் கட்டுவது இல்லை. இப்பண்பாடு முழுக்க முழுக்க இந்து மதத்தில் உள்ள பார்ப்பனர் உள்பட அனைவரும் நடத்திவரும் பண்பாடு.

''நெல்லை மாவட்டம் சங்கரன்கோவிலில், சங்கரநாராயணசாமி கோவிலில், ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் திருவிழா நடைபெறுகிறது. அதில் யானையை வைத்து பிடிமண் எடுத்து ஊர்வலமாகச் சென்று சங்கரநாராயணன் கோவிலில் வைத்து வழிபடும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.''

''மும்பை தாராவி கிராஸ்ரோட்டில் 'பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்கம்' நிர்வகிக்கும் மகாகணேசர் கோவில் உள்ளது. அந்தக் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப் படுகிறது. அதன் ஒரு பகுதியாக, 'ஷீவதாரண பிடிமண் கொடுக்கும் நிகழ்ச்சி' நடக்கிறது. முதலில், கணபதிஹோமத்தை நடத்தி, சிறப்பு அபிஷேகம் செய்து, கொடி ஏற்றப்பட்டு, பிறகு இந்த 'ஷீவதாரண பிடிமண் கொடுக்கும் நிகழ்ச்சி' நடைபெறுகிறது.''

இப்படிப் பல சான்றுகளைக் காட்ட முடியும். இந்தப் பண்பாடு யாருடைய பண்பாடு என்ற ஆய்வுக்கு முன், தற்போது இந்தப் பண்பாடு என்னவாக இருக்கிறது என்று ஆய்வதுதான் சரியாக இருக்கும். மாநாட்டில், இந்தப் பிடி மண்ணைத் தோழர் நல்லக்கண்ணு அவர்கள், 'துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு' பெற்றுக்கொண்ட காட்சியை, எவ்விதக் கூச்சமும் இன்றி முகநூல்களில் வெளியிட்டனர். பிடிமண்ணைத் தூக்கினால், தோளில் இருக்கும் துண்டு இடுப்புக்கு வரத்தான் செய்யும். அதனால்தான், தோளில் துண்டு போடும் உரிமைகளுக்காகவும் போராடிய கருஞ் சட்டைகள்தான், பிடிமண் பண்பாட்டில் ஒளிந்துள்ள ஜாதிப் பண்பாட்டை அடையாளம் கண்டு எச்சரிக்கிறோம்.

அடிமைத்தனங்களை உரிமைகளாகக் கருதிக் கொண்டு, நம்மையே ஏற்றுக் கொள்ள வைப்பது தான் இந்து மதப் பண்பாடு. காவி வண்ண உடை, ஸ்வஸ்திக் சின்னம், அரசமரத்தடிப் பிள்ளையார் வழிபாடு இவை போன்ற பல பழக்க வழக்கங்கள் இந்து மதத்திற்கு உரியவை அல்ல. அதற்காக அவற்றை நாம் இப்போது ஏற்க முடியாது.

மாட்டுக்கறி உண்பது பார்ப்பனர்களின் பண்பாடு தான். அதற்காக, எந்தப் பார்ப்பானும் தனது பாரம்பரிய உணவுப் பண்பாட்டை மீட்கிறேன் என்று மாட்டுக்கறி உண்பதில்லை. அதைப் பரப்புவதில்லை. அந்த உணவு தற்போது யாருடைய உணவாக இருக்கிறது என்று மட்டுமே பார்க்கிறான். அந்தப் பார்வை தான் நமக்கும் தேவை. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடங்கியவர்களும், அவற்றின் தலைமைக்குழுக்களில் நிறைந் திருப்பவர்களும் பார்ப்பனர்களே என்று அடிக்கடி அடையாளம் காட்ட வேண்டாம்.




25.06.2017 ஞாயிறன்று, சென்னையில் நடைபெற்ற காட்டாறு குலதெய்வ நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ் திறனாய்வு அரங்கம்



09.07.2017 ஞாயிறன்று திருச்சியில் சாதி ஒழிப்பு முன்னணியும், தமிழக மக்கள் பண்பாட்டு இயக்கமும் இணைந்து நடத்திய, காட்டாறு குலதெய்வ, நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ் திறனாய்வு அரங்கம்.

Owner and Publisher by : S.Vijayaragavan
Consulting Editor: C.Ragavan

# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com